வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 11.12.2021 சனிக்கிழமை | இதழ் : 06 | பக்கங்கள் : 16




# உறவுகளுடன் வாழத் துடிக்கும் நாம் இறக்க முன்னர் நீதியை வழங்குங்கள்

## ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மனு

வவுனியா, டிசெ. 11

“எமது உறவுகளுடன் வாழத் துடிக்கும் எமக்கான நீதியை நாம் இறப்பதற்கு முன்னர் பெறுவதற்கு வழி செய்ய வேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கம் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு மனு ஒன்றை அனுப்பியுள்ளது.

நேற்று வவுனியாவில் நடத்தப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கத்தின் போராட்டத்தில், ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கு எழுதப்பட்ட மனு வாசிக்கப்பட்டது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு:- இலங்கை அரசாங்கத்தின் படைகளாலும், துணை ஆயுதக் குழுக்களாலும் வலிந்து காணா மல் ஆக்கப்பட்ட எமது உறவு களைத் தேடும் தொடர் போராட்டம் இன்று (நேற்று) 1750ஆவது நாளாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

1948ஆம் ஆண்டு ஐ. நா. பொதுச் சபையால் 15

# தொற்றால் 18 பேர் பலி!

கொழும்பு, டிச. 11

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 18 பேர் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 9 ஆண்களும், 9 பெண்களும் அடங்குகின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் 15

# 93 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது பட்ஜெட்!

கொழும்பு, டிசெம்பர் 11

நாட்டின் 76ஆவதும் 2022ஆம் ஆண்டுக்கானதுமான வரவு - செலவு திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு திருத்தங்களுடன் 93 மேலதிக வாக்குகளால் நேற்று மாலை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக 64 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே 93 மேலதிக வாக்குகளால் வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்பட்டது. 15



## மனித உரிமைகள் தினத்தில் வடக்கு, கிழக்கில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, 15

## இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதே பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை

### பாராளுமன்றத்தில் சித்தார்த்தன்

கொழும்பு, டிசெ. 11

“வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கடனுக்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அல்லல்பட்டுத் திரிகின்றார் . இந்த வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போதே அவர் கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலையில் 15

## ‘பூஸ்டர் டோஸ்’ வழங்கல் வடக்கில் திங்கள் ஆரம்பம்!



யாழ்ப்பாணம், டிசெ. 11

கொரோனா தொற்றை கட்டுப்படுத்த மூன்றாவது தடுப்பூசியான - பூஸ்டர் டோஸ் வழங்கல் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நாளைமறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப் பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் 15

## ஐ. நா. உதவி செயலாளர் டிசெ.15 இலங்கை விஜயம்



கொழும்பு, டிசெ. 11

ஐக்கிய நாடுகள் சபைக்கான உதவி செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 15ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவர் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டத்தின் உதவி நிர்வாகி மற்றும் அதன் ஆசிய 15

## கொழும்பிலிருந்து யாழ். வந்த பஸ் விபத்து; ஒருவர் மரணம்!

வவுனியா, டிசெ. 11

கொழும் பில் இருந்து யாழ்ப்பா ணம் நோக்கி வந்த அதி சொகுசு பஸ் ஒன்று அநுராதபுரம் பகுதியில் விபத் துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெள்ளவத்தையில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு யாழ்ப்பாணம் நோக்கி வந்த குறித்த பஸ் நேற்று அதிகாலை அநுராதபுரம் - மதவாச்சிக்கும் இகிரிகொல்லாவைக்கும் இடைப்பட்ட 15

## கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டு கடலில் வீசப்படுகிறார்களா?

### சபையில் கேள்வி எழுப்பினார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, டிசெ. 11

“கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் கொல்லப்பட்டு கடலில் வீசப்படுகிறார்களா? யாழ்ப்பாணக் கடற்கரைகளில் ஒதுங்கும் சடலங்கள் அவர்களுடையனவா?”

- இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- யாழ்ப்பாண 15



## ஐ.நா. உதவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- பசுபிக் பிராந்திய பணிப்பாளராகவும் உள்ளார்.

அண்மையில் முடிவடைந்த உலக கால நிலை மாநாட் டின் முடிவுகள் மற்றும் பிராந்தியத்தினுள் கொரோனாத் தொற்றுக்குப் பிந்திய பொருளாதார மீட்சி என்பவற்றை ஆராய்வதே உதவி செயலாளர் நாயகத்தின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

இதன்போது அவர் விசேடமாக மனிதவள அபிவிருத்தித்துறையின் வெற்றிக்காக, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதை விரைவுபடுத்துவதில் அவர் கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பூஸ்டர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்துள்ளார்.

இதன்படி, 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 18 வயதிற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்குவகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய் பரவும் ஆபத்துள்ள மக்கள் தொகுதியினருக்கும் (தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பணிபுரிவோர், சுகாதார துறை சாராத முன்னிலை ஊழியர்கள்) பூஸ்டர் டோஸாக பைசர் தடுப்பூசியை பெறமுடியும் என்று அவர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்த செய்திக் குறிப்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது மூன்று மாத இடைவெளியின் பின்னர் இந்தத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளலாம்.

இரண்டு தடவைகள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களில் தொற்றுக்கு உள்ளானவர்கள் அவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 6 மாத கால இடைவெளியின் பின்னர் இத்தடுப்பூசியை பெற்றுக் கொள்ளலாம்.

சினோபார்ம் அல்லது ஏதாவது ஒரு கோவிட்-19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை மூலம் மக்களுக்கு அறிவிக்கப்படும்.

தடுப்பூசி பெறத் தகுதியுடையவர்கள் அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளில் அல்லது அவர்களால் அறிவிக்கப்படும் நிலையங்களில் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதலும் மற்றும் தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமையில் தடுப்பூசி வழங்குவதற்கு யாழ்ப்பாணம் மாவட்டத்தில் யாழ். போதனா வைத்திய சாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்கா வற்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளி நொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளி லும் இந்தத் தடுப்பூசிகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

30 வயதுக்கு மேற்பட்டவர்களில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ள மருத்துவ அதிகாரியின் பரிந்துரை கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவது ஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கடத்தப்பட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடாநாட்டு கரையோரங்களில் 6 சடலங்கள் கரையொதுங்கின. இதில் நெடுந்தீவில் கரையொதுங்கிய சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளது. வல்வெட் டித்துறை, பருத்தித்துறை பகுதிகளில் மீட்கப்பட்ட 3 சடலங்கள் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. கட்டைக்காட்டில் மீட்கப்பட்ட சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மருதங்கேணி பொலிஸ் பகுதியில் மீட்கப்பட்ட சடலம் எங்கே? அதனை பொலிஸார் சென்று பார்த்துள்ளனர். அந்த சடலத்துக்கு என்ன நடந்தது? கரையொதுங்கிய சடலங்களும் காணாமல்போவது மிக ஆபத்தானது.

பாகிஸ்தானில் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவுக்கு எமது அஞ்சலிகளை செலுத்திக் கொள்கிறோம். இதேபோன்ற காட்சிகள் இலங்கையிலும் நடந்துள்ளன. தளபதி ரமேஷ், இசைப்பிரியா, பாலச்சந்திரன் போன்றவர்களும் இப்படி கொல்லப்பட்ட படங்கள் வெளியாகியுள்ளன. கர்மவினையே திரும்பி வரும் என சொல்வார்கள்.

பாகிஸ்தானில் நடந்த சம்பவத்துக்கு பிரதமர் இம்ரான் கான் உடனடியாக மன்னிப்பு கோரினார். இலங்கையில் அப்படியான சிங்களத் தலைவர்கள் யாருமில்லை - என்றார். (அ)

## கொழும்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வளைவில் 145ஆவது மைல் கல்லிற்கு அருகில் உள்ள வளைவில் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது அந்த பஸ்ஸில் பயணித்த 74 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் உயிரிழந்தார். அத்துடன்,10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)

## மனித உரிமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை, மாவட்டங்களில் இந்தப் போராட்டங்கள் நேற்று நடத்தப்பட்டன.

யாழ்ப்பாணத்தில், நாவலர் வீதியில் அமைந்துள்ள ஐ. நா. அலுவலகம் முன்பாக இந்தப் போராட்டம் இடம் பெற்றது. கிளிநொச்சியில் கந்தசுவாமி கோயில் முன்றலில் போராட்டம் ஆரம்பித்தது. பின்னர் போராட்டக்காரர்கள் டிப்போ சந்திவரை பேரணியாக சென்றிருந்தனர்.

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர்ச்சியாக போராட்டத்தை முன்னெடுத்து வரும் முல்லைத்தீவு - மாங்குளம் வீதியிலுள்ள அலுவலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மன்னாரில் பேருந்து நிலையம் முன்பாக காலை 10 மணிக்கு போராட்டம் ஆரம்பமாகி சில மணிநேரம் தொடர்ந்து இடம்பெற்றது. வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 1750ஆவது நாளாக தொடர்ச்சியாக நடத்தும் போராட்டப் பந்தலின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை - நற்பிட்டிமுனையிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகம் முன்பாக போராட்டம் இடம் பெற்றது. மட்டக்களப்பில் காந்தி பூங்கா முன்றலில் இடம்பெற்ற கவனவீர்ப்பு போராட்டத்தில் ஏராளமானவர்கள் பங்கேற்றனர். (ஐ)

(தொடர்புடைய செய்திகள் பக்கம் 6 இல்)

## இனப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கின்றார். எனவே, தேசிய இனப் பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காண்பதுதான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாக இருக்க முடியும்", என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை குழு நிலை விவாதத்தில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், வடக்கு, கிழக்கு 30, 40 வருடங்களாக யுத்தத்தை கண்டுவந்த இடம். ஏறக்குறைய ஒரு இலட்சம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அங்குள்ளன. அவர்களுக்கான வருமானங்கள் மிகவும் குறைவாகவே உள்ளன. இவர்கள் மிகவும வறுமையில் வாடிக்கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கு ஏதாவது ஒரு வழியிலே அரசாங்கம் உதவவேண்டும்.

வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கடனுக்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அல்லல்பட்டுத் திரிகின்றார். இந்த வரவு - செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும்போதே அவர் கடன் கேட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றார். இவ்வளவு பொருளாதார நெருக்கடி வந்தமைக்கு மிக முக்கிய காரணம் இந்த அரசாங்கமோ கொரோனாவோ மாத்திரமல்ல. ஏறக்குறைய சுதந்திரம் பெற்ற காலம் முதல் இந்த நாட்டில் இருக்கக்கூடிய ஸ்திரமில்லாத தன்மை. இது தேசிய இனப்பிரச்னையால் வந்த பிரச்னை. இந்தப் பிரச்னையை தீர்ப்ப தற்கு பல மாநாடுகள், கூட்டங்கள், ஒப்பந்தங்கள் எல்லாம் செய்யப்பட்டன. ஒவ்வோர் ஒப்பந்தங்களும் கிழித்தெறி யப்பட்டன. ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையே இந்த ஸ்திரமற்ற நிலைமைக்கு காரணம் - என்றார்.

## 93மேலதிக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத்திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம். பி. வாக்கெடுப்பை கோரியதை அடுத்து இலத்திரனியல் முறைப்படி மாலை 6.05 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின்மூன்றாம் மதிப்பீடு மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட எம். பி.யான இஷாக் ரஹ்மான், பதுளை மாவட்ட எம்.பி.யான அரவிந்த குமார் தேசியப்பட்டியல் எம்.பி.யான டயானா கமகே,மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சிகளான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம். பிக்களான ஹரீஸ், பைசல் ஹாசிம், தௌபீக், நசீர் அஹமட், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம். பியான அலி சப்ரி ரஹீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம். பியான முஷாரப், சுயேச்சையாக செயல்படும் எம்.பியான அத்துரலிய ரத்தின தேரர் ஆகியோர் வாக்களித்தனர்.

எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி, இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அநுர குமார திஸநாயக்க தலைமையிலான ஜே. வி. பி., கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி, க. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியன எதிர்த்து வாக்களித்தன.

ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பி. குமார வெல்கம உட்பட 4 எம். பிக்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கடந்த நவம்பர் 12ஆம் திகதி வரவு - செலவு திட்டத்தை முன்வைத்து உரையாற்றினார்.

இதைத் தொடர்ந்து நவ. 13 தொடக்கம் 22ஆம் திகதி வரை வரவு - செலவு திட்ட இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெற்று, இறுதிநாளில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போது ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 93 மேலதிக வாக்குகளால் இரண்டாம் மதிப்பீடு நிறைவேற்றப் பட்டது.

23ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை குழுநிலை விவாதம் இடம்பெற்றது. இறுதிநாளான நேற்று வாக்கெடுப்பு நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

## தொற்றால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 573 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## உறவுகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகடனப்படுத்தப்பட்ட இந்தத் தினமானது பல்வேறுபட்ட உரிமைகளை மனித உரிமைகளாக வரையறுத்து கூறியிருந்தாலும் அவற்றுள் வாழ்வதற்கான உரிமையும், சுயகௌரவத்துடனும், பாரபட்சமின்றி நடத்தப்பட வேண்டும் என்பதையும் முக்கியமானதாகக் கொள்ளலாம்.

இலங்கையிலே தமிழர்கள் மேற்கூறப்பட்ட இரண்டு உரிமைகளும் அற்றவர்களாகவே வாழ்கிறார்கள். பிச்சையாக எதைப் போட்டாலும் பெரிய மனதுடன் ஏற்றுக்கொள்ளும் சுயமரியாதை அற்ற குணமும், கூப்பிட்டால் அற்ப சலுகைகளுக்காக விழக்கூடிய குணமும் கொண்ட தமிழர்களால் மட்டுமே பயமின்றி உயிர் வாழ முடியும்.

எங்கள் உறவுகள் சுயகௌரவத்துடன் வாழும் உரிமைக்கு ஆசைப்பட்ட குற்றத்திற்காக, வஞ்சகமாகச் சரணடையச் செய்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள். சம உரிமையுடன் நடத்தப்பட வேண்டும் என்று ஆசைப்பட்டதற்காகக் கடத்திச் செல்லப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள். பெற்றோர் சரணடையும்போது கூட்டிச் சென்ற ஒன்றுமறியாத 20இற்கு மேற்பட்ட பச்சிளம் பாலகர்கள் அவர்கள் யாருக்கு என்ன செய்தார்கள்? மழலைகளின் வாழும் உரிமை கனவுகள் மறுக்கப்பட்டு அவர்களையும் வலிந்து காணாமல் ஆக்கியமையை மனித உரிமை மீறல் என்ற சொற்களில் மட்டும் அடக்கி விட முடியுமா?"

இவர்கள் அனைவருக்கும் வாழும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அந்த உறவுகளைத் தேடியலையும் எங்களுக்கு எங்கள் கணவனுடனும் பெற்ற பிள்ளைகளுடனும் வாழும் உரிமை மறுக்கப் பட்டுள்ளது. மேற்படி உரிமைகளுக்காகப் போராடிய எங்களில் 108 பெற்றோர்கள் தங்களின் குழந்தைகளின் நிலையறியாமலே மரணித்து விட்டார்கள். மீதம் இருக்கும் நாம் எங்களின் நிலையை அறிய போராடுவதோடு இறந்தவர்களின் குழந்தைகளுக்காகவும் சேர்த்துப் போராடுகின்றோம். அதுமட் டுமல்ல இந்தத் தொடர் போராட்டத்தை தொடர்வதற்கே நாம் பலமாகப் போராட வேண்டியுள்ளது.

ஆணையாளர் அவர்களே, எமது உறவுகளுடன் உறவுகளைத் தேடும் உரிமைக்காகவே போராட வேண்டிய நிலையிலுள்ள வயோதிபத் தாய்மாராகிய நாங்கள் மிகவும் மன்றாட்டத்துடன் கேட்பது யாதெனில், எமது உறவுகளுடன் வாழத் துடிக்கும் எமக்கான நீதியை விரை வில் அதாவது நாம் இறப்பதற்கு முன்பெற வழி செய்யுங்கள், அதுவரை எமது போராட்டம் தொடரும் - என்றுள்ளது. (ஐ)

# இப்படியும் நடக்கிறது...!

எண்பதுகளின் ஆரம்ப காலம். ஊர்க்குருவியார் 'ஈழநாடு' வில் பணியில் இருந்த ஓர் இரவு.

தேசிய சுவடிகள் திணைக்களத்தின் தமிழ்ப்பகுதி பணிப்பாளராக இருந்த க. நவசோதி பணியில் இருந்து ஓய்வுபெற்றார். நாடறிந்த நல்ல பேச்சாளர், இலக்கிய வாதி, பன்முகம் கொண்ட நவசோதி, ஓய்வுபெறுவதை செய்தியாக எழுதிக்கொடுத்திருந்தேன்.

அச்சுக்கோப்பாளர் அதனை அச்சுக்கோத்து, ஒப்பு நோக்காளரின் பார்வைக்கு அனுப்பப்பட்டது.

அவர் ஏதோ நான் தவறாக எழுதிவிட்டேன் என்று கருதிக்கொண்டு தேசிய சுவடிகள் திணைக்களம் என்பதை தேசிய சுருட்டு திணைக்களம் என்று மாற்றி திருத்திக் கொடுத்திருந்தார்.

இவருக்கு அப்படியொரு திணைக்களம் இருக்குமா என்ற சந்தேகமாக இருக்கலாம். அப்போது, சுருட்டுக்கு எங்காவது சுன்னாகத்திலோ அல்லது உடுவிலிலோ சுருட்டு திணைக்களம் என்று யாராவது சுருட்டு சுற்றுபவர்கள் நகைச்சுவைக்காக எழுதி வைத்திருக்க இவர் அதனைக் கண்டாரோ தெரியவில்லை.

அந்த ஒப்புநோக்காளர் இவ்வாறு மாற்றி திருத்தியதைக் கவனித்த ஊர்க்குருவியார் மீண்டும் அதனை சுவடிகள் என்று திருத்தி எழுதி அச்சகப் பகுதிக்கு அனுப்பிவிட்டார்.

பத்திரிகை அச்சுக்கு போகும் முன்னர் கடைசி முழுப்பக்க புறுவ் இந்த ஒப்புநோக்காளரிடம் காண்பிக்கப்பட, அவர் மீண்டும் சுருட்டு என்று மாற்றிவிட்டார்.

அவர் நினைத்தது தான் திருத்தியதை அச்சுக் கோப்பாளர்கள் திருத்தாமல் விட்டுவிட்டார்கள் என்று.

கடைசியில் அன்றைய "ஈழநாடு"வில் நவசோதி சுருட்டுத் திணைக்கள பணிப்பாளர் பதவியிலிருந்தே ஓய்வுபெற்றார்.

சில வார இடைவெளிக்குப்பின்னர் மீண்டும் இந்த பத்தியை கடந்த புதனன்று எழுதத் தொடங்கியபோது இராசமாணிக்கம் அவர்களின் பேரனார் பெயரை 'சாணக்கிய ராகுல்' என்று நான் எழுதியதை எமது ஒப்புநோக்காளர் 'சாணக்கியன்' என்று திருத்தியிருந்தார்.

அவரைப் பொறுத்தவரை நான் தவறாக எழுதிவிட்டேன் என்பது நினைப்பு.

இந்த சம்பவம் எனக்கு அந்தப் பழைய சம்பவத்தை நினைவுக்கு கொண்டுவந்தது.

நமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் முழுப் பெயர் என்பது நமக்கு பெற்றோர் என்ன பெயரை வைக்கிறார்களோ அதுவே பெயராக இருக்கும். எமது முதல் பெயராக நாம் தந்தையின் பெயரை பயன்படுத்துவோம். வேறும் சிலர் தந்தையின் தந்தை பெயரையும் பயன்படுத்துவதுண்டு.

ஆனால், குடும்பப்பெயர் (surname) என்று ஒரு பெயர் அவர் பரம்பரை முழுவதும் தொடர்வது இல்லை. ஆனால், சிங்களவர்கள் தமது குடும்பப்பெயரை ஒரு பெயராக தொடர்வார்கள்.

உதாரணத்திற்கு பண்டாரநாயக்காவின் மகனுக்கும் குடும்பப்பெயர் பண்டாரநாயக்கா என்றே இருக்கும் ஆனால், அவருக்கு முதல் பெயராக ஒன்றோ அல்லது இரண்டோ ஏன் மூன்று பெயர்களைக் கூட வைத் திருப்பார்கள்.

தமிழ் கத்தோலிக்கர்களும் ஒரு புனிதரின் பெயரையும் சேர்த்து வைப்பார்கள்.

இராசமாணக்கம் அவர்களின் புதல்வர் ராசபுத்திரனின் புதல்வன் சாணக்கியன் என்றால், நாம் இராசமாணிக்கம் ராசபுத்திரன் சாணக்கியன் என்று எழுதியே பழக்கப்பட்டிருக்கிறோம்.

அதுவே, சிங்களவர்கள் என்றால் இராசமாணிக்கம் என்பது குடும்ப பெயராக இருந்தால் சாணக்கியன் இராசமாணிக்கம் என்றே எழுதலாம்.

ஆனால், சாணக்கியனின் 'பாஸ்போர்ட்'டில், முதற் பெயர்: இராசமாணிக்கம் என்றும் வேறு பெயர்கள் என்பதில் சாணக்கிய ராகுல் ராசபுத்திரன் என்றே இருக்கின்றது.

இவர் தனது பெயரை சாணக்கியன் என்று மாற்றியதாக இதுவரை தெரியவரவில்லை. அவ்வாறு மாற்றுவதெனில் பத்திரிகைகளில் அறிவித்தல் கொடுத்து நீண்ட நடைமுறைகளின் பின்னரே மாற்றவேண்டியிருக்கும்.

அவரின் பெயர் பற்றிய நீண்ட விளக்கம் தேவையற்றதுதான். ஆனால், அவர் அண்மையில் கனடா சென்றிருந்தபோது மற்றவர்கள் பற்றிய விமர்சனங்களை முன்வைத்தபோது முதலில் அவரின் பெயர் சர்ச்சைக்கு சிறு விளக்கத்தோடு அவரையும் விமர்சனத்திற்கு உட்படுத்த வேண்டும்போல இருந்தது.

அவரின் சர்ச்சைக்குரிய கனடா கருத்துக்கள் குறித்து நாளை பார்ப்போம்.

**- ஊர்க்குருவி**



# தலைகீழாக புரண்ட சட்டவிரோத மணல் ஏற்றிய ஹன்ரர்

யாழ்ப்பாணம், டிசெ. 11

விசேட அதிரடிப்படையினரின் பிடியிலிருந்து தப்புவதற்காக தலை தெறிக்க ஓடிய ஹன்ரர் ரக வாகனம் தலைகீழாக தடம் புரண்டு விபத்துக்குள்ளானது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை வடமராட்சி, வல்லிபுரம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சட்டவிரோதமான முறையில் மண் ஏற்றிவந்த ஹன்ரர் ரக வாகனத்தை விசேட அதிரடிப்படையினர் மறிக்க முற்பட்டபோது ஹன்ரர் வாகனம் வேகமாக தப்பிச் செல்ல முற்பட்ட நிலையில் வல்லிபுரம் பகுதியில் தொலைத் தொடர்பு கம்பம் ஒன்றில் மோதியதுடன் தலைகீழாக புரண்டு நெல் வயலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

மண் கடத்தல்கரர்கள் தப்பிச் சென்றுள்ள நிலையில் இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-02)

# தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பான தெரிவு குழுவின் பதவிக்காலம் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 11

தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவின் பதவிக் காலத்தை அடுத்த வருடம் மார்ச் 31 ஆம் திகதி வரை நீடிக்குமாறு சபைத் தலைவர் தினேஷ் குணவர்தனவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு பாராளுமன்றம் நேற்று அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்தக் குழுவின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய சபாநாயகரால் இந்த பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவின் முதல் கூட்டம் மே 17ஆம் திகதி நடைபெற்றது.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தேர்தல்கள் ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள், ஏனைய தொடர்புடைய நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் தேர்தல் சட்டங்களை சீர்திருத்துவது தொடர்பான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக இந்த தெரிவுக்குழுவின் முன் அழைக்கப்பட்டுள்ளதாக அதன் தலைவரும் சபைத் தலைவருமான தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

தெரிவுக்குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கல்வி tv CHANNEL-1

**11.12.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**11.12.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
11.12.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 25

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

editor@eelanadu.lk, eelanaduweekly@gmail.com,
news@eelanadu.lk
021 730 1370

# இந்துக்களின் மரபுரிமை?

இந்துக்களின் மரபுரிமையை ஒருபோதும் அழிக்கமாட்டோமென, தேசிய மரபுரிமைகள் மற்றும் அருங்கலைகள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பாராளுமன்ற விவாதத்தின்போது தெரிவித்திருக்கின்றார். வடக்கு, கிழக்கில் வாழும் இந்து மக்களின் மரபுரிமைகளை பாதுகாக்கும் அக்கறை அரசாங்கத்திற்கு இருந்தால் அது வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால், நடைமுறையில் அதற்கான சான்றுகளை காண முடியவில்லை.

தமிழர் தாயகப் பகுதியான வட, கிழக்கை பொறுத்தவரையில் தமிழர்களின் வரலாற்று அடையாளங்களையும், இந்துமத அடையாளங்களையும் எளிதாக பிரிக்க முடியாது. அந்தளவுக்கு, இரண்டும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்திருக்கின்றன. அரசியல் ரீதியில் தமிழர்கள் மதத்தை முன்னிலைப்படுத்தாமல் இருந்தாலும்கூட, வட, கிழக்கில் தமிழர்களின் பூர்வீகத்தை அடையாளப்படுத்த வேண்டுமாயின் – அதற்கு இந்துமத அடையாளங்கள் இன்றியமையாதவை.

சிங்களவர்கள் எவ்வாறு தங்களின் வரலாற்று அடையாளங்களை பௌத்த மதத்திலிருந்து அடையாளப்படுத்த முயற்சிக்கின்றார்களோ – அவ்வாறானதோர் அடையாளம் தமிழ் மக்களுக்கும் உண்டு. ஆனால், பௌத்தத்திற்கு இருப்பது போன்ற அரசியல் அங்கீகாரம் இந்து மதத்திற்கு இல்லை. இதன் காரணமாக புரதான இந்து அடையாளங்கள் தொடர்ந்தும் அழிந்து வருகின்றன. புராதன இந்து அடையாளங்களை அழித்தல் என்பது, அடிப்படையில், தமிழர்கள்மீதான அடையாள அழிப்புத்தான்.

இலங்கையில் ஒரு காலத்தில் பஞ்ச ஈஸ்வர நிர்வாகம் இருந்ததை சிங்கள வரலாற்று ஆசிரியர்களே ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். பஞ்ச ஈஸ்வர நிர்வாகமொன்று இருந்திருக்கின்றதென்றால் – முழு இலங்கையும் இந்து மதத்தின் ஆளுகைக்குள் இருந்திருக்கின்றது என்பதுதானே அதன் பொருள். உண்மையில் இந்த நாட்டில் பௌத்தமும், இந்து மதமும் அரச மதமாக இருந்திருக்க வேண்டும். அவ்வாறு இருந்திருந்தால் இன ரீதியான பிரச்னைகள் தீவிரமடைவதைக்கூட, தடுத்திருக்கலாம். ஆனால், பௌத்தம் அரச மதமாகவும், அந்த பௌத்தத்தின் தாய் மதமான இந்து மதம் இரண்டாம் தரமான ஒன்றாகவுமே ஆட்சியாளர்களால் நோக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் புராதன இந்து ஆலயங்கள் இருந்த இடங்களிலெல்லாம், பௌத்த ஆலயங்கள் இருந்தன என்று பிரசாரம் செய்யப்படுகின்றது. ஆனால், இதன் வரலாற்றை சரியாக ஆராய்ந்தால், இந்த பிரச்னைகளின் ஆழத்தை புரிந்துகொள்ள முடியும். வடக்கு, கிழக்கில் இந்துக்களாக வாழ்ந்த தமிழ் மக்களில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர், கௌதம புத்தரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டு, தமிழ் பௌத்தர்களாக வாழ்ந்திருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் இந்தப் போக்கு வீழ்ச்சியடைந்திருக்கின்றது. வடக்கு, கிழக்கில் இருக்கின்ற புராதன பௌத்த ஆலயங்களில் அநேகமானவை, தமிழ் பௌத்தர்களால் நிறுவப்பட்ட பௌத்த ஆலயங்களாகும். இதுவும் வரலாற்று ஆசிரியர்களால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், காலப்போக்கில், பௌத்தம் என்பது சிங்கள மொழி பேசுகின்ற மக்களுக்கு மட்டுமான ஒன்றாகக் குறுகிவிட்டது. எனவே, தமிழர்களால் நிறுவப்பட்ட பௌத்த ஆலயங்களை சிங்களவர்களின் அடையாளங்களாகக் காண்பிக்க முற்படுவது முற்றிலும் தவறானது.

அரசாங்கம் இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும். வடக்கு, கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் இந்து தமிழர்களின் அடையாளங்களை சிதைக்க முற்படும் சக்திகளுக்கு துணைபோகக் கூடாது. பௌத்தத்தை பாதுகாப்பதற்காக பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்யும் அரசாங்கம், இந்து மதத்தை பாதுகாப்பதற்காக என்ன செய்திருக்கின்றது? இந்து தமிழர்களின் மரபுரிமையின்மீது இந்த அரசாங்கத்திற்கு உண்மையிலேயே அக்கறையிருப்பின், பௌத்தத்திற்கு நிகராக, இந்து மதத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும்.

# உலக தமிழர்களின் பாரம்பரியத்தை மதிக்கும் லண்டன்!

-அலசுவது இராஜதந்திரி-



இந்தியாவும், இலங்கையும் ஐக்கிய இராச்சியத்தால் ஆளப்பட்ட நாடுகளில் மிக முக்கியமானவையாகும். இந்த இரு நாடுகளிலுமே பிரித்தானியா தனது ஆட்சியதிகாரங்களைக் கொண்டிருந்தபோது மிக அதிகளவில் பொருளாதார ரீதியாக சுரண்டியிருந்தது.

இந்தியாவையும், இலங்கையையும் பிரித்தானியா சுரண்டியிருந்த அதேசமயம் இவ்விரு நாடுகளிலும் தனது எச்சங்களாக பொருளாதார, கல்வித்துறைகளில் நிறுவன ரீதியான வளர்ச்சிகளுக்கும் வித்திட்டிருந்தது.

இந்தியாவும், இலங்கையும் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரமடைந்து எழுபது ஆண்டுகளை பூர்த்தி செய்துவிட்டன. இந்த ஏழு தசாப்த காலப்பகுதியில் இந்தியாவிலும், இலங்கையிலும் கல்வியில் சகலதுறைகளிலும் சிறப்புப் பெற்றவர்களாக இலங்கையர்களும், இந்தியர்களும் விளங்குவதோடு புலம்பெயர்ந்த பல நாடுகளிலும் தமது தொழில் துறைகளில் சாதனைகளைப் புரிந்து வருகின்றனர்.

பிரித்தானியாவை பொறுத்தவரை இந்தியர்களும், இலங்கையர்களும் குறிப்பாக இந்திய, இலங்கை தமிழர்கள் கால்பதிக்காத துறைகளே இல்லை என்று கூறுமளவுக்கு சகல துறைகளிலும் இரு நாடுகளினதும் தமிழர்கள் இருந்து வருகின்றனர்.

அத்துடன், பிரித்தானியாவில் இந்திய, இலங்கை தமிழர்கள் மருத்துவத்துறையில் நன்கு காலூன்றியிருப்பதோடு தமது இன்றைய சந்ததி வாரிசுகளையும் மருத்துவத் துறையில் கால்பதிக்க வைத்துள்ளனர்.

இந்நிலையில் பிரித்தானியாவின் தேசிய சௌக்கிய சேவையில் பதினைந்தாயிரத்துக்கும் அதிகமான தமிழ் மருத்துவர்கள் இருப்பதை அந்நாட்டின் அரசியல் வட்டாரங்களே சுட்டிக்காட்டியுள்ளதோடு தமிழர்கள் மருத்துவத்துறையிலும் ஏனைய துறைகளிலும் ஆற்றிவருகின்ற உயரிய சேவைகளைப் பாராட்டி அங்கீகாரமளிப்பதுபோல எதிர்வரும் தை மாதம் லண்டனில் தமிழர் பாரம்பரிய மாதமாக அறிவிக்கப்படவேண்டுமென நிக்கலஸ் ரொஜர்ஸ் என்ற லண்டன் உள்ளூராட்சி உறுப்பினர் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

லண்டனில் மருத்துவத்துறையில் தமிழர்களின் பங்களிப்பு பற்றி நிக்கலஸ் ரொஜர்ஸ் கருத்து வெளியிடுகையில் மருத்துவர்களாக மட்டுமல்ல. தாதியர்கள் மற்றும் மருத்துவத் துறை சார்ந்த ஏனைய துறைகளிலும் கல்வித் துறையில் ஆசிரியர்களாகவும் தமிழர்கள் பெருந்தொகையில் இருப்பதாக சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்நிலையில் ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும் தை மாதத்தில் வருகின்ற தைப் பொங்கல் தினத்தை தமிழர்கள் தமது வாழ்வியலில் மங்களகரமான ஆரம்பமாகவும் தமது விளைபொருட்களின் அறுவடை மாதமாகவும் கருதுகின்ற நிலையில், தை மாதத்தை தமிழர் பாரம்பரிய மாதமாக அறிவித்து தமிழர்களை கௌரவிக்க வேண்டுமென நிக்கலஸ் ரொஜர்ஸ் அறிவித்துள்ளார்.

அவர் இதுகுறித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கையில், "இன்றைய சந்ததி தமிழர்கள் மட்டுமல்ல. நீண்ட நெடுங்காலமாகவே தமிழர்கள் பிரட்டிஷாருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர்களாக இருந்துள்ளனர். இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து மட்டுமல்ல. மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த தமிழர்களும் பிரித்தானியாவின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு மட்டுமல்ல. அரசியல் ரீதியாகவும் பங்களிப்பை வழங்கி வருகின்றனர் என்று நிக்கலஸ் ரொஜர்ஸ் தெரிவித்துள்ளார்.

இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிரிட்டிஷ் விமானப்படையிலும் தமிழர்கள் பணியாற்றியமையையும் நிக்கலஸ் ரொஜர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.


எனவே, இவற்றின் அடிப்படையில் பிரித்தானியர்களின் நன்றி உணர்வை தமிழர்களுக்குத் தெரிவிக்கும் விதத்தில் தை மாதத்தை தமிழர் பாரம்பரிய மாதமாக அறிவிக்க வெண்டுமென நிக்கலஸ் ரொஜர்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் தமிழர் பாரம்பரிய மாதமான தை மாதத்தை கௌரவிக்கும் விதத்தில் தமது நாடுகளில் முத்திரைகளையும் வெளியிட்டுள்ளன. அத்துடன், கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தாமே தமிழர்களின் பாரம்பரிய நிகழ்வுகளை முன்னின்று நடத்துவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார்.

"தே மதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்ய வேண்டும்" என்ற மகா வாக்கியத்துக்கு அமைவாக புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமக்கும் தாம் வாழ்ந்து வருகின்ற தேசங்களுக்கும் சகல துறைகளிலும் அரும்பெரும் சேவையாற்றி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

எனவே, தமிழர் பாரம்பரிய மாதமாக தை மாதத்தை கருதுவதென்பது உலகின் ஒரு மூத்த இனத்தை கௌரவிப்பதாகவும், அந்த இனத்தின் மொழிக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகாரத்தை வழங்குவதாகவுமே இருக்கின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



டிசெம்பர் - 11 சனிக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை - 25
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 9.00 - 10.30
திதி : அட்டமி




**மேடம்**
தாயாரின் உடல்நலனில் இருந்த சிறு தொந்தரவுகள் சரியாகும். உங்களின் நல்ல செயல்கள் மூலம் நல்லோரின் ஆசி கிடைக்கும். கவலை தீரும். குடும்ப ஒற்றுமை சீராக காணப்படும்.

**இடபம்**
அரசுப்பணியாளர்களுக்கு நன்மைகள் நடக்கும். மகிழ்ச்சி கூடும். வாழ்வில் உயர்வு வரும். உங்களின் நீண்ட நாள் கோரிக்கை ஒன்றுநிறைவேறும். மேலதிகாரிகளுடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும்.

**மிதுனம்**
நல்ல செயல்களை செய்து பிறரிடம் பாராட்டு பெறுவீர்கள். மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கும். எதிர்பாராத பணவரவு உண்டு. உங்களின் கூடுதல் முயற்சியால் பொருளாதார வசதிகள் மேம்படும்.

**கடகம்**
சமூகத்தில் முக்கிய நபர் என்று பெயர் எடுப்பீர்கள். இன்று பேச்சிலும் செயலிலும் கவனமாக இருந்தால் பிரச்னை வராது. திறமையுடன் புதிய விஷயங்களை கற்று சிறப்படைவீர்கள்.

**சிம்மம்**
பொதுநல விஷயத்தில் ஈடுபட்டு பாராட்டைப் பெறுவீர்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வழக்குகளில் இருந்த தேக்க நிலை மாறும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வீர்கள்.

**கன்னி**
நீண்ட நாள் பிரச்னை தீரும். மனதில் நல்லெண்ணம் மேலோங்கும். உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உங்களிடம் உதவி கேட்பார்கள். நண்பர் ஒருவர் மூலம் எதிர்பாராத நன்மை ஒன்று ஏற்படக்கூடும்

**துலாம்**
அரசாங்க விஷயங்கள் சாதகமாக முடியும். மனதைரியம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையை அனுசரித்து செல்வது நல்லது. வருமானம் திருப்தி தரும். மனைவியின் முயற்சியால் சங்கடம் ஒன்று தீரும்.

**விருட்சிகம்**
உங்களின் முயற்சியால் சிரமம் ஒன்றிலிருந்து விடுபடுவீர்கள். வாழ்க்கைத்துணைக்காக செலவுகள் செய்யவேண்டி வரும். இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். மனதில் உற்சாகம் கூடும்.

**தனுசு**
மன நிம்மதி கூடும். சகோதரரால் ஆதாயம் உண்டாகும். அலுவலகத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி அடைவீர்கள்.

**மகரம்**
நண்பர்களால் ஆதாயம் உண்டாகும். எதிலும் பொறுமையை கடைப்பிடியுங்கள். மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தை இழக்க வேண்டாம். தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும்.

**கும்பம்**
உறவினர்களால் சிறிய செலவும், நன்மையும் ஏற்படும். சுபச்செலவுகளால் கையிருப்பு குறையும். மகிழ்ச்சி அதிகரிக்கும். வேலை பற்றிய முக்கிய முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்ப்பது நல்லது.

**மீனம்**
நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியை தரும். சேமிப்பில் ஆர்வம் கூடும். உணவு விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவும். வெளியூரில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி கிடைக்கும்.

# பல்கலைக்கழகம் மூலம் தேசிய கல்வி கொள்கையை திணிப்பதற்கு முயற்சி

## வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் கண்டனம்

சென்னை, டிசெ 11,

தேசிய கல்விக் கொள்கையைப் பல்கலைக்கழக மானியக் குழு மூலம் செயல்படுத்த முயலும் மத்திய அரசின் நடவடிக்கைக்குத் தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

“தேசிய கல்விக் கொள்கையைத் தமிழ்நாடு அரசு கடுமையாக எதிர்த்து வரும் நிலையில், அக்கல்விக் கொள்கையைச் செயல்படுத்தப் பல்கலைக்கழக மானியக்குழு மூலம் மத்திய அரசு முயற்சி செய்து வருவது அதிர்ச்சி அளிக்கிறது.

எந்தவித ஜனநாயகப் பண்பையும், மக்களாட்சி நிறுவனங்களையும் மதிக்கத் தயாராக இல்லாத மோடி அரசு, பாராளுமன்றத்திலோ பாராளுமன்றக் குழுக்களிலோ எந்த விவாதமும் நடத்தாமல், தேசிய கல்விக் கொள்கை 2020ஐ, அரசின் கொள்கையாக 29.07.2020 அன்று அறிவித்திருந்தது.

இக்கல்விக் கொள்கை என்பது, மாநில அரசின் கல்வி உரிமையைப் பறிக்கிற, சமஸ்கிருதம் மற்றும் இந்தியைத் திணிக்கிற, கல்வித்துறையில் தங்கு தடையற்ற தனியார் கட்டணக் கொள்ளைக்கு வழி ஏற்படுத்துகிற, கல்வி உளவியலுக்கு முரணானது என்று அப்போதே தமிழக வாழ்வுரிமைக் கட்சி குற்றம் சாட்டியிருந்தது.

மேலும், மருத்துவக் கல்லூரிக்கு அனைத்திந்திய நீட் தேர்வு இருப்பது போல், கலை அறிவியல் பாடங்கள் உள்ளிட்ட கல்லூரி வகுப்புகள் அனைத்திற்கும் அனைத்திந்திய நுழைவுத் தேர்வு வைப்பது, அதற்கெனத் தனியார் நிறுவனங்களின் நுழைவை உறுதி செய்யும் வகையில், தேசியத் தேர்வு ஆணையம் உருவாக்குவது உள்ளிட்ட பல்வேறு சிக்கல்கள் தேசிய கல்விக் கொள்கையில் இருப்பதைச் சுட்டிக்காட்டிருந்த தமிழக வாழ்வுரிமைக் கட்சி, கல்வித் தொண்டர்கள் என்ற பெயரால் ஆர்.எஸ்.எஸ். ஆட்களையும், அற நிறுவனங்கள், அரசுப் பங்கேற்பு என்ற பெயரால் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் கல்வி நிறுவனங்களையும் திணிக்கும் மோசமான திட்டமும் இக்கல்விக் கொள்கையில் இருக்கிறது என எச்சரிக்கை விடுத்திருந்தது.”

-இவ்வாறு வேல்முருகன் தெரிவித்துள்ளார்.

# ஒரு முதலமைச்சரால் எவ்வளவு முடியுமோ அதைவிட அதிகமாகவே ஸ்டாலின் பணி

## முதலமைச்சருக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை பாராட்டு

மதுரை, டிசெ. 11,

ஒரு முதலமைச்சரால் எவ்வளவு முடியுமோ, அதைவிட அதிகமாகவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணியாற்றி வருவதாக உயர்நீதிமன்ற மதுரை கிளை பாராட்டியுள்ளது. அவரைப் பாராட்டாவிட்டாலும், விமர்சிக்க வேண்டாம் எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி மற்றும் மு.க.ஸ்டாலின் குறித்து அவதூறாக பேசி யூடியூப்பில் காணொலி வெளியிட்ட வழக்கில் கைதாகி சிறையில் உள்ள சாட்டை துரைமுருகன், தனக்கு பிணை வழங்க கோரி உயர்நீதிமன்ற மதுரை கிளை மனுதாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை நீதிபதி புகழேந்தி முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது அரசு தரப்பில், அரசியல் தலைவர்களை அவதூறாக விமர்சிக்கமாட்டேன் என மனுதாரர் பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்த நிலையில், முதலமைச்சர் குறித்து தரக்குறைவாக விமர்சித்துள்ளதால் அவரது ஜாமீனை ரத்து செய்து உத்தரவிட வேண்டும் என வாதிட்டனர்.

இதனை தொடர்ந்து வழக்கை விசாரித்த நீதிபதி, ஒரு முதலமைச்சராக எவ்வளவு முடியுமோ, அதைவிட அதிகமாகவே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பணியாற்றி வருகிறார் என பாராட்டினார். மேலும், முதலமைச்சரை பாராட்டாவிட்டாலும், இது போன்ற செயல்களை தவிர்க்கலாம் என குறிப்பிட்ட நீதிபதி, முதலமைச்சர் குறித்து சாட்டை துரைமுருகன் மீண்டும் அவதூறாக பேசியதை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# ஜெயலலிதாவின் வேதா இல்ல சாவி தீபா, தீபக்கிடம் நேற்று ஒப்படைப்பு

சென்னை, டிசெ. 11

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்தின் சாவி உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தீபா, தீபக்கிடம் ஒப்படைக்கப்பட்டது. உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்போவதாக அ. தி. மு. க. கூறியிருந்த நிலையில் சாவி நேற்று ஒப்படைக்கப்பட்டது.

ஜெயலலிதா வாழ்ந்த வேதா இல்லம் அரசுடமையாக்கப்படும் என கடந்த ஆட்சியில் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். நிலத்தை கையகப்படுத்துவதற்கான தொகையையும் உரிமையியல் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு செலுத்தியது. ஜெயலலிதா இல்லம் அரசின் சொத்தாக்கப்பட்டது.

இதனை எதிர்த்து ஜெயலலிதாவின் வாரிசு தீபா, தீபக் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். இந்த மனுவை விசாரித்த தனி நீதிபதி, மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லமான வேதா நிலையத்தை அரசுடமையாக்கிய சட்டம் செல்லாது என்று அண்மையில் உத்தரவிட்டார்.



ஜெயலலிதா வாரிசுகள் என அறிவிக்கப்பட்ட தீபா, தீபக்கிடம் வேதா இல்லத்தின் சாவியை 3 வாரங்களில் ஒப்படைக்கவும் உத்தரவிடப்பட்டது. ஜெயலலிதாவுக்கு மெரினா கடற்கரையில் நினைவிடம் இருக்கும் போது வேதா இல்லத்தை நினைவில்லமாக மாற்றவது தேவையற்றது என உயர்நீதிமன்றம் கூறியிருந்தது. இதை தொடர்ந்து, சென்னை போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் வேதா இல்ல சாவியைக் கேட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தீபாவும், தீபக்கும் மனு அளித்தனர்.

இந்நிலையில், ஜெயலலிதாவின் போயஸ் தோட்ட இல்லத்தின் சாவி உயர்நீதிமன்ற உத்தரவுப்படி தீபா, தீபக்கிடம் ஒப்படைக்கப்பட்டது. ஜெயலலிதாவின் வாரிசுகளான தீபா, தீபக்கிடம் சென்னை மாவட்ட ஆட்சியர் விஜயராணி சாவியை ஒப்படைத்தார். போயஸ் கார்டன் இல்லம் சென்று சாவியை தீபா, தீபக் பெற்றுக்கொண்டனர். அச்சமயம் தீபாவின் கணவர் மாதவன் உடனிருந்தார். தற்போது தீபா, ஆதரவாளர்களுடன் போயஸ் இல்லம் சென்றார். அங்கு மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

# உள்ளூராட்சி தேர்தல் ஏற்பாடுகள் ஆரம்பம்

## தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

**கொழும்பு, டிசெ. 11**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையின் பொருத்தமான சீர்திருத்தங்களை இனங்கண்டு தேவையான திருத்தங்களை பரிந்துரைப்பதற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் கூட்டத்தில் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இதனைக் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் பதவிக்காலம் 2022 மார்ச் 20ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபை தேர்தல்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கனவே தயாராகி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு குறைந்தது 04 மாதங்களுக்கு முன்னதாகவே தயார்ப்படுத்துவது இன்றியமையாதது என தேசிய தேர்தல் ஆணையத்தின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா இதன்போது மேலும் வலியுறுத்தினார்.

நிமல் புஞ்சிஹேவாவின் கருத்துப்படி, உள்ளூராட்சித் தேர்தல் தற்போதைய சட்ட நிலைமைக்கு மாற்றமின்றி நடத்தப்பட வேண்டுமானால், தேர்தலுக்கான திகதிகள் 2022 ஜனவரியில் அறிவிக்கப்பட வேண்டும் என கருதப்படுகிறது.

பாராமன்ற தெரிவுக்குழு எதிர் வரும் டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# பூநகரி மண்ணித்தலை சிவாலய மீளுருவாக்க பணிகள் ஆரம்பம்

*கிளிநொச்சி, டிசெ. 11*

பூநகரி மண்ணித்தலை சிவாலயத்தை மீளுருவாக்கம் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பூநகரி மண்ணித்தலை சிவாலயம் 1990ஆம் ஆண்டு அழிவடைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பின்னர் அதனை பேணி பாதுகாத்து வந்த நிலையில், மீளுருவாக்கம் செய்வதற்கு தற்போது தொல்லியல் திணைக்களம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தொல்லியல் ஆய்வு உத்தியோகத்தர் வி.மணிமாறனின் நெறிப்படுத்தலில், தொல்லியல் அதிகாரிகளின் மேற்பார்வையில், மீளுருவாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில் யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோரும் பங்கேற்றுள்ளனர். (அ)

# யாழ். நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்து உள்ளூர், வெளியூர்களுக்கு தனியார் சேவை

## டிசெம்பர் 15 ஆம் திகதி முதல் ஆரம்பம்

*யாழ்ப்பாணம், டிசெ. 11*

தனியார் பஸ்களின் உள்ளூர், வெளியூர் மற்றும் கொழும்புக்கான இரவு நேர சேவைகள் என்பன டிசெம்பர் 15 முதல் புதிய நெடுந்தூர பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பிக்கப்படும் என யாழ்ப்பாண மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த செய்திக்குறிப்பில், தனியார் பஸ்களின் உள்ளூர் சேவை பஸ்கள் நெடுந்தூர பஸ் நிலையத்தில் இருந்தது புறப்
பட்டு தற்போது இயங்கி வரும் இடங்களில் 10 நிமிடங்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றிச் செல்லும். அதேபோல் வெளியிடங்களில் இருந்து வரும் பிரயாணிகள் நெடுந்தூர பஸ் நிலையத்தில் இறக்கப்படுவர்.

இ.போ.ச பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்கும் செல்லும் நீண்ட தூரத்துக்கு பயணிக்கும் பஸ்கள் ஆஸ்பத்திரி வீதியினூடாக சத்திரச்சந்தியை அடைந்து அங்கிருந்து கே.கே.எஸ் வீதியூடாக சென்று பிரதான வீதியை அடைந்து வெளிமாவட்டங்களுக்கான பயணத்தை மேற்கொள்ளும் என்பதோடு, வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பஸ்களும் இப் பாதையையே பயன்படுத்தவேண்டும் என்பதுடன் இப்பாதை ஒழுங்குமுறையானது உடனடியாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இ.போ.ச பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் வெளிமாவட்டங்களுக்குச் செல்லும், நீண்ட தூரத்துக்கு பயணிக்கும் பஸ்கள் ஆஸ்பத்திரி வீதியூடாக வேம்படிச் சந்திக்கு செல்வது தடை செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-03)

# சிலிண்டர்கள் குறித்து ஆராய எதிரணி எம்.பிக்கள் களத்தில்

*கொழும்பு, டிசெ 10,*

எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு மற்றும் அவற்றின் கலவை தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, கெரவலப்பிட்டியிலுள்ள எரிவாயு நிறுவனத்துக்கு நேற்று முன்தினம் விஜயம் மேற்கொண்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜே.சி.அலவத்துவல, முஜிபுர் ரஹ்மான், ஹெக்டர் அப்புஹாமி, எம்.வேலுகுமார் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களே இவ்வாறு விஜயம் மேற்கொண்டனர்.

குறித்த நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த முஜிபுர் ரஹ்மான் எம்.பி,,

“எரிவாயு நிறுவனத்தின் பணிப்பாளருடன் நாம் கலந்துரையாடினோம். நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைவாகவே தற்போது எரிவாயு உற்பத்தி செய்யப்படுவதாக பணிப்பாளர் எம்மிடம் தெரிவித்தார்.

அதேபோன்று கடந்த சில தினங்களுக்கு முன்பு எரிவாயு கலவையில் சிறு சிறு மாற்றங்கள் செய்யப்பட்டது உண்மை என்பதை பணிப்பாளர் ஏற்றுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி என்ற முறையில் இதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். அதேபோன்று எரிவாயு வெடிப்புச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான வழிவகைகளை அரசாங்கம் தெரியப்படுத்த வேண்டும்.

நமது நாட்டில் நூற்றுக்கும் 40 சதவீதமான மக்கள் எரிவாயு அடுப்புக்களைப் பயன்படுத்தி வருகின்றனர். இன்று எரிவாயு சிலிண்டர்களை வாங்குவது வீட்டுக்கு வெடிகுண்டு வாங்குவதைப் போன்றுள்ளது.

எனவே இது தொடர்பில், அரசாங்கம் தலையிட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இது தொடர்பில் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு, குற்றப்புலனாய்வு திணைக்களம், நுகர்வோர் அதிகார சபை ஆகியவற்றில் முறைப்பாடு செய்துள்ளோம்.

எரிவாயு சிலிண்டர்களின் கலவை மற்றும் தரம் குறித்து விசாரணை நடத்தவேண்டும் என்று நாம் வலியுறுத்தியுள்ளோம்-என்றார். (அ)

# பிரச்னைக்குரிய சிலிண்டர்களை உடன் மீளப் பெறவேண்டும் அரசு

## ஹர்சன ராஜகருணா எம்.பி வலியுறுத்து

*கொழும்பு, டிசெ. 11*

நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டுமெனில், பிரச்னைக்குரிய அனைத்து சிலிண்டர்களையும் மீளப்பெற வேண்டும் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் நாட்டிலுள்ள சகல மக்களினதும் வீடுகளுக்கு குண்டுகளை அனுப்பியுள்ளது. நாட்டில் நூற்றுக்கு 40 சதவீதமான மக்கள், எரிவாயு அடுப்புகளை பயன்படுத்தி வருகின்றனர். விசேடமாக மேல் மாகாணத்தில் வாழும் மக்களே அதிகளவு எரிவாயு அடுப்புகளை பயன்படுத்தி வருகின்றனர்.

நாட்டில் சிறிது காலம் எரிவாயு சிலிண்டருக்கு தட்டுப்பாடு நிலவியது. நுகர்வோர் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் நீண்ட வரிசையில் காத்திருந்து எரிவாயு சிலிண்டர்களை பெற்றுக்கொண்டு வீடுகளுக்குச் சென்றால் குண்டுகள் வெடித்துச் சிதறுவதைப் போன்று எரிவாயு சிலிண்டர்களும் வெடித்துச் சிதறுகின்றன.

எரிவாயு சிலிண்டர் வெடிப்புச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், இவ்விடயத்துக்கு பதில் கூறியாகவேண்டும்.

ஒவ்வொரு முறையும் அமைச்சர்கள் இவ்விடயத்துக்கு ஒரு வாரத்தில் தீர்வு காண்போம், இருவாரத்தில் தீர்வு காண்போம் என்றே கூறிவருகின்றனர். பல மாதங்களாக இந்த பதிலையே அனைத்து விடயங்களுக்கும் கூறி வருகின்றனர். எரிவாயு



சிலிண்டர்களை மீளப்பெற்றுக் கொள்வதை ஒரு தீர்வாக அரசாங்கம் முன்வைத்துள்ளது.

எனினும், சிலிண்டர்கள் பயன்படுத்தாமல் சிலிண்டர்களில் உள்ள ஸ்ரிக்கர்கள் அகற்றப்படாமல் இருந்தால் மட்டுமே அவை மீளப்பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டுமெனில், இந்தப் பிரச்னைக்கு சிறந்த முறையில் தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனில் பிரச்னைக்குரிய அனைத்து சிலிண்டர்களையும் மீள பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (கே)

# பல்கலைக்கழக மாணவர்களின் பதிவுக்கான கால எல்லை நீடிப்பு

*கொழும்பு, டிசெ. 11*

பல்கலைக்கழக மாணவர்களைப் பதிவு செய்யும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களை பதிவு செய்யும் கால எல்லை இன்றுடன் நிறைவடையும் நிலையில், குறித்த பதிவு செய்யும் காலம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, பல்கலைக்கழக மாணவர்களை பதிவு செய்யும் கால எல்லை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார். (அ)





# காணாமற்போனோரின் உறவுகள் நேற்று மனித உரிமைகள் தினத்தில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நாவலர் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலக முன்றலில் இந்த கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் சர்வதேசமே எமக்கு நீதிபெற்று தர வேண்டும், இலங்கை அரசாங்கம் எம்மை ஏமாற்றுகின்றது, நமக்கு இழப்பீடு வேண்டாம், மரணச் சான்றிதழ் வேண்டாம், ஓ.எம்.பி வேண்டாம் எமக்கு எமது பிள்ளைகள் மட்டுமே வேண்டும் என்ற கோஷங்களை எழுப்பியவாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கமும் கலந்து கொண்டார். (அ-03)

# இராணுவத் தளபதி டில்லிக்கு பயணம்!

## பிபின் ராவத்தின் இறுதிச்சடங்கில் பங்கேற்க

கொழும்பு, டிசெ. 11

ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த இந்தியாவின் முதல் பாதுகாப்புப் படைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் இராணுவ இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக பாதுகாப்புப் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இந்தியாவுக்குச் சென்றுள்ளார். அதன்படி, அவர் தனது மனைவி மற்றும் இராணுவ அதிகாரிகள் உட்பட 11 பேருடன் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை புதுடில்லிக்கு புறப்பட்டுச் சென்றார்.

ஜெனரல் சவேந்திர சில்வா, இந்தியாவில் உள்ள அவரது துணைத்தலைவரின் துக்ககரமான மறைவைக் கேள்விப்பட்டு, ஊடகங்களுக்கும் கொழும்பில் உள்ள இந்திய தூதரகத்துக்கும் வெளியிட்ட விசேட இரங்கல் செய்தியில் ஆழ்ந்த வருத்தத்தையும் அதிர்ச்சியையும் தெரிவித்தார். (அ)

# பஸ்-வான் நேருக்கு நேர் மோதி அனுராதபுரத்தில் நேற்று விபத்து

## இரண்டு பேர் உயிரிழப்பு

கொழும்பு, டிசெ. 11

அநுராதபுரம், புத்தளம் பிரதான வீதியில் மகாபுலங்குளம் பிரதேசத்தில் கடற்படைக்குச் சொந்தமான பஸ் மற்றும் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

நேற்றுக் காலை 5.00 மணியளவில் இந்த வாகனங்கள் இரண்டும் நேருக்கு நேர் மோதியதால் விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்தில் வானின் சாரதி உள்ளிட்ட இருவர் உயிரிழந்துள்ளனர். மேலும் ,வானில் பயணித்த ஆறு பேர் மற்றும் கடற்படைச் சிப்பாய்கள் எட்டு பேர் காயங்களுக் குள்ளாகியுள்ளனர் என எலயா பத்துவ பொலிஸார் தெரிவித் தனர்.

புனாவ கடற்படை முகாமிலிருந்து புத்தளம் கடற்படை முகாமுக்கு அதிகாரிகள் சிலரை அழைத்துச் சென்றுக்கொண்டிருந்த பஸ் மற்றும் நொச்சியாகமவிலிருந்து அநுராதபுரம் நோக்கி பயணித்துக்கொண்டிருந்த வான் என்பனவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் காயங்களுக்குள்ளானவர்கள் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த் வான் திருமண நிகழ்வொன்றுக்கு அநுராபுரம் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பிற நாட்டு பீல்ட்மார்ஷல்கள் பற்றி படித்து அவர்கள்போல் நடவுங்கள்!

## பொன்சேகாவுக்கு சொன்னார் வீரசேகர



**கொழும்பு, டிசெ. 11**

**பிற நாடுகளில் உள்ள பீல்ட் மார்ஷல்களை பற்றி படித்தறிந்து, அவர்களை போன்று நடந்து கொள்ளுங்கள் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு கூறினார் பொதுபாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர.**

நேற்று பாராளுமன்றத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாதாள உலகக்குழுவினருடன் எனக்கு தொடர்பு என சரத் பொன்சேகா தெரிவித்தார். உடற்பயிற்சிக்கூட அழைப் பொன்று எனக்கு வந்தது. அதில் கலந்துகொண்ட புகைப் படத்தைத்தான் சரத் பொன்சேகா காண்பித்தார். கடுவலை நகர மேயர்தான் அந்த அழைப்பு விடுத்தார்.

உடற்பயிற்சிக்கூடத்தின் மூலம் இளைஞர்கள் தவறான வழியில் செல்வது தடுக்கப்படும். இது பாதாள உலகத்துக்கு தொடர்பென்றால், சிறப்புரிமைகளுக்குள் ஒளிந்து கொள்ளாமல் சி.ஐ.டியில் முறையிடுங்கள். உண்மை என்னவென்பதை தெரிந்து கொள்வோம்.

பீல்ட் மார்ஷல் என்பது உயரியது. இறக்கும் வரை சம்பளம், சலுகைகள் கிடைக்கும். அந்தப் பதவியுடன் பாராளுமன்றத்துக்கு வருபவர்கள், அதற்கு தகுதியாக, மக்களுக்கு சேவை செய்ய வேண்டும்.

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு இறுதியாக ஒரு அழைப்பு விடுக்கிறேன். இந்தியாவின் பீல்ட் மார்ஷல் மனிக்ஷோ பற்றி படித்தறியுங்கள். அவர் எவ்வளவு மேன்மையாக செயற்பட்டார் என படித்தறியுங்கள்.

தானும், இராணுவமும் வீழ்ந்தாலும் நாடு வெல்ல வேண்டுமென்றார். அப்படித்தான் வாழ்ந்தார். ஆனால் பொன்சேகா, இராணுவத்தை காட்டிக் கொடுத்தார். இராணுவத்தின் பிளேன்ரீ பற்றி கதைக்கிறார். யுத்தத்தின்போது வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த புலிகளை சுட்டுக்கொன்றதாக சர்வதேசத்துக்கு இராணுவத்தை காட்டிக் கொடுத்தார்.

நேற்றும், இன்றும் என்னைப்பற்றி தெரிவிக்கப்பட்ட பொய்யான தகவல்களை கன்சார்ட்டிலிருந்து நீக்க வேண்டுமென முன்மொழிகிறேன்-என்றார். (அ)

# வெடித்து சிதறிய திரவ உரம்!

கொழும்பு, டிசெ. 11

விவசாய சேவை மத்திய நிலையத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட திரவ உரம் வெடித்து சிதறிய சம்பவமொன்று அநுராதபுரம், பதவியா பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

அநுராதபுரம், பதவியா, பராக்ரம பிரதேசத்திலுள்ள விவசாயிகளுக்காக அந்த பிரதேசத்தில் விவசாய சேவை மத்திய நிலையத்தினால் திரவ உர கொள்கலன்கள் நேற்று முன்தினம் பெற்றுக்கொடுக்கப் பட்டன.

இவ்வாறு பெற்றுக்கொடுக்கப்பட்ட தர உரக் கொள்கலன்கள் அதிக அழுத்தத்துக் குள்ளாகி வெடித்து சிதறியுள்ளன.

நனோ நைதரசன் திரவ உரம் என குறிப்பிட்டே பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள இந்த உரம், பெரும் துர்மணம் மிக்க வேறு உர வகை என்று விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விவசாய அமைச்சின் அனுமதி பெற்று தேசிய நிறுவனமொன்றினால் இந்த திரவ உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட விவசாய சேவை பிரிவின் பிரதி ஆணையாளர் சமிந்த ஏக்கநாயக்க தெரிவித்தார். (அ)




# மன்னாரில் போராட்டம்

மன்னார், டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் போராட்டம் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை காலை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில், மன்னார் பஸ் தரிப்பிடத்துக்கு முன் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இடம்பெற்ற குறித்த கவனவீர்ப்பு போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அருட் தந்தையர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே?, மனிதம் பாதுகாக்கப் படுகிறதா?, அரசே காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே?, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிரந்தர தீர்வை பெற்று தருவீர்களா? ஆகிய பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (அ)

# இனி மின்வெட்டு இல்லை!

கொழும்பு, டிசெ. 11

நாடு முழுவதும் எந்தவொரு பகுதியிலும் நேற்று முதல் மின்வெட்டு இருக்காது என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 4ஆம் திகதி மாலை 6 மணி முதல் இரவு 9.30 மணி வரை அதிகபட்சமாக ஒரு மணித்தியாலம் வரை நாட்டின் குறிப்பிட்ட சில பகுதிகளில் மின்சார விநியோகத்தை நிறுத்த தீர்மானிக்கப்பட்டது.

அண்மையில் நிறுத்தப்பட்ட நுரைச்சோலை 2ஆம் மற்றும் 3ஆம் மின் உற்பத்தி இயந்திரங்கள் வழமை போன்று மீண்டும் தேசிய மின்னழுத்தத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

அதன்படி நேற்று முதல் நாட்டின் எந்தப் பகுதியிலும் மின்வெட்டு நடைமுறைப் படுத்தப்படமாட்டாது என அமைச்சு தெரிவித்துள்ளது.



# உயிரிழந்த 9 டொல்பின்கள் முல்லைத்தீவில் ஒதுங்கின!

முல்லைத்தீவு, டிசெ. 11

முல்லைத்தீவு, அளம்பில் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் 09 டொல்பின்கள் கடந்த இரு தினங்களில் மீட்கப்பட்டுள்ளதாக வட மாகாண வனவிலங்கு வைத்தியர் கரியாலயம் தெரிவித்துள்ளது.

5-6 அடி உடைய 05 ஆண் டொல்பின்களும், 2 அடி நீளமுடைய சிறிய ஆண் டொல்பின்களும், 5 அடியுடைய 03பெண் டொல்பின்களும் இவ்வாறு கரையொதுங்கின.

இந்த டொல்பின்கள் தொடர்பிலான இறுதிக்கட்ட நடவடிக்கைகள் வனஜீவராசிகள் வைத்தியர் பீ. கிரிதரன் உள்ளிட்ட அதிகாரிகளால் முன்னெடுக்கப்படவுள்ளன.

இவ்வாறு மீட்கப்பட்ட டொல்பின்களின் உடல் பாகங்கள் அரச இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இந்த டொல்பின்களின் உயிரிழப்புக்கான காரணத்தை உறுதியாக குறிப்பிட முடியாது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த டொல்பின்களின் உடல்களிலிருந்து பிளாஸ்ரிக் துண்டுகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளதுடன் பிளாஸ்ரிக் பொருட்களை உட்கொண்டமை அல்லது மீன்பிடி வலைகளில் அகப்பட்டமையினால் இவை உயிரிழந்திருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.(அ)

# புதிய லேபிளுடன் வந்த எரிவாயுவும் வெடிப்பு!

கொழும்பு, டிசெ. 11

நாட்டின் பல பகுதிகளிலும் தற்போது புதிய லேபிளின் கீழ் எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இவ்வாறு வெளியிடப்பட்ட எரிவாயு சிலிண்டர்களிலும் வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், எரிவாயு வெடிப்புகளை விரைவில் நிறுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என தெரிவித்தார்.

(அ)

# லிட்ரோ காஸ் நிறுவனத்துக்கு தற்காலிக தடை விதியுங்கள்!

## செந்தில் தொண்டமான் வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 11

லிட்ரோ காஸ் நிறுவனத்துக்கு உடனடியாக தற்காலிக தடை விதிக்கவேண்டும் என்பதுடன், எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணத்தையும் உடனடியாக வழங்கவேண்டுமென இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபத் தலைவரும், பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:

நாடளாவிய ரீதியில் தொடர்ச்சியாக கடந்த ஒரு மாதகாலமாக பதிவாகும் எரிவாயு வெடிப்பு சம்பவங் களால் அச்சத்துடன் சமையலை மேற்கொள்ளும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இதனால் பல குடும்பங்கள் உணவுகள் இல்லாமலும் தவித்துள்ளன.

இலங்கை என்பது ஒரு வெப்பமண்டல நாடாகும். வெப்ப சமநிலையை பேணும் வகையில் தான் எரிவாயு உற்பத்திகள் இதுவரைக்காலமும் இடம்பெற்று வந்தன. குறிப்பாக சிலிண்டர்களில் திரவவாயுவின் கலவை 80 சதவீதமாக காணப்பட்டது. திரவவாயு கலவை 80 சதவீதத்திலிருந்து 50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளமையால் தான் எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவாகி வருகின்றதாக தகவல்கள் மூலம் அறிய முடிகிறது. அவ்வாறு திரவவாயு மாற்றத்துக்கான அனுமதியை வழங்கியது யார்?

லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு உடனடியாக தற்காலிக தடை விதிக்கப்படவேண்டும். இதனால் ஓர் உயிர் ஏற்கனவே பறியோயுள்ளது. ஆகவே, எரிவாயு வெடிப்பு சம்பவங்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு உரிய நிவாரணத்தையும் லிட்ரோ காஸ் நிறுவனம் உடனடியாக வழங்கவேண்டும்.

இதேவேளை, திரவவாயு மாற்றப்பட்டப்பட்ட விவகாரம் தொடர்பில் உடனடி விசாரணைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதுடன், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்-என்றார். (அ)

# நிதியமைச்சும் விரைவில் இராணுவத்தின் கைகளில்

## சபையில் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 11

**நாடு பெரும் அபாயகரமான நிலையில் உள்ளது. எரிவாயு சிலிண்டர் வெடிக்கிறது. உரப் பொதி வெடிக்கிறது. வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் டொலர் பலாத்காரமாக 203 ரூபாவுக்கு மாற்றப்படுகிறது. இது அநீதியானது. முதலீட்டாளர்களை நாட்டிலிருந்து வெளியேற்றும் அபாயத்தை ஏற்படுத்தும் என சுட்டிக்காட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.**

நிதியமைச்சு சரியாக செயல்படவில்லையென அதுவும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

பாராளுமன்றத்தில் நேற்று வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படும் டொலரை 203 ரூபாவுக்கு மாற்றும் சுற்றறிக்கையை மத்திய வங்கி வெளியிட்டுள்ளது. இது அநீதியானது. பலாத்காரமான இந்த நடவடிக்கையை நிறுத்துங்கள்.



பசுமை விவசாயமும் இப்போது இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்நிய செலாவணி கையிருப்பை 3.5 பில்லியன் டொலராக உயர்த்தப் போவதாக மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டிருந்தார். அது நடக்காவிட்டால், மத்திய வங்கியும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படும்.

வெள்ளை சிவப்பு லேபிள் உள்ள எரிவாயு சிலிண்டர் பாதுகாப்பானது என நுவர்வோர் விவகார அமைச்சர் கூறினார். ஆனால் இப்பொழுது அதுவும் வெடிக்கிறது. எரிவாயு பிரச்னையை தீர்க்க முடியாவிட்டால், எரிவாயு இராணுவத்திடம் ஒப்படைக்கப்படும்.

நிதியமைச்சு சரியாக செயல்படவில்லையென அதுவும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்படும். என்ன நடக்கிறது இந்த நாட்டில்? இது மிக ஆபத்தானது-என்றார்.

(அ)

# எனக்கு பைத்தியம் இல்லை!

## எம்.பிக்களிடம் கூறினார் ரணில்



கொழும்பு, டிசெ. 11

மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறிக்கொள்வதற்கு எனக்கு பைத்தியம் பிடிக்கவில்லையெனத் தெரிவித்த முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரு மான ரணில் விக்கிரமசிங்க, அடுத்த வருடமும் மிகவும் நெருக்கடியான வருடமாக இருக்கும் என்றும் கூறினார்.

பிரதமர் பதவியை, ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன எனத் தகவல்கள் கசிந்திருந்தன. அதில், உண்மை எதுவும் இருக்கின்றதா? என்பது தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ரணிலிடம் கேட்டுள்ளனர். அதற்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

நாட்டில், தற்போது ஏற்பட்டிருக்கும் ஐக்கிய அமெரிக்க டொலர் பற்றாக்குறை, அடுத்த வருடம் ஜனவரி இறுதி வரையிலும் இருக்கும். பொருளாதாரமும் மிகவும் கடினமான நிலையில் நிற்கிறது என்று தெரிவித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அடுத்த வருடமும் மிகவும் கடினமான வருடமாக இருக்கும் என்றார்.

# பஸில் ராஜபக்ஷ வந்தார் நிதி நெருக்கடி தீர்ந்ததா?

## அநுரகுமார சபையில் கேள்வி


கொழும்பு, டிசெ. 11

“பஸில் ராஜபக்ஷவுக்கு ஏழு மூளைகள் உள்ளன. அவர் நிதி அமைச்சரானால் நிதி நெருக்கடி தீரும் என ஆளுங்கட்சியினர் பிரசாரம் செய்தனர். இன்று பஸில்தான் நிதி அமைச்சர். ஆனால் நிதி நெருக்கடி அதிகரித்துள்ளது.”- என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட் டினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர்,

பஸில் வந்தால் செல்வம் பெருகும் என்றார்கள். அது நடக்கவில்லை. அதன்பின்னர் அஜித் நிவாட் கப்ரால் மத்திய வங்கி ஆளுநர் ஆனால் நிதி நெருக்கடி தீரும் என்றார்கள், ஆனால் இன்று என்ன நடக்கின்றது?

பால்மா இறக்குமதியைக் கூட ஒரு வருடம் நிறுத்த வேண்டிவரும் என நிதி அமைச்சர் குறிப்பிடுகின்றார். அந்தளவுக்கு நிதி நெருக்கடி உச்சம் பெற்றுள்ளது. எனவே. பொறுப்பான முறையில் பொருளாதாரத்தை முகாமை செய்ய வேண்டும்-என்றார். (அ)



# ரெலோ- சுவிஸ் தூதர் சந்திப்பு!

கொழும்பு, டிசெ. 11

சுவிற்சர்லாந்து தூதுவர் டொமினிக் வர்கலர் மற்றும் அரசியல்துறை செயலாளர் சிடோனியா கபிரியல் அம்மையார் ஆகியோரை ரெலோ குழுவினர் சந்தித்து பேசியுள்ளனர்.

நேற்றுக் காலை கொழும்பில் உள்ள தூதரகத்தில் இச் சந்திப்பு நடைபெற்றது.

இதில் ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோவிந்தன் கருணாகரம், வினோ நோகராதலிங்கம் மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலைகள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

(அ)

# நுண்கடன் பொறியில் சிக்கிய மக்களும் போராட்டங்களும்

■ நிமால் அபேசிங்க



அதிகார பேராசையுடைய அரசியல்வாதிகள் இனவாதத்தை பரப்புகின்றனர். ஒரே நாட்டு மக்களை இனம், மதம் மற்றும் சாதியின் அடிப்படையில் பிரிக்கின்றனர். இனவாதத்தின் குறுகிய மனநிலையில் சிக்கியுள்ளவர்களுக்கு இது தெரியாது. இல்லாவிட்டால் தெரிந்துகொண்டே உண்மையை மறக்கின்றனர்.

இலங்கையில் இனம், மதம் மற்றும் சாதி பாகுபாடின்றி பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடுகின்றனர். இந்த வறிய மக்களை இனவாத சிந்தனையால் மேலும் சிக்கவைத்து, இலங்கை அரசியல்வாதிகள் தமது அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிப்பது ஒன்றும் இரகசியமல்ல.

வறுமைக்கு இனவாதமோ மதமோ சாதியோ இல்லை. வறுமையின் பிடியில் சிக்கியுள்ளவர்கள் இந்த உண்மையை உணர ஆரம்பித்துள்ளனர். வறுமை காரணமாக இலங்கை முழுவதும் சுமார் 2.8 மில்லியன் மக்கள் நுண்கடன் பொறியில் சிக்கியுள்ளனர். கடன்பட்ட இந்த வறிய மக்களை அரசியல் களத்திற்கு அழைத்து வருவதன் மூலம் சிலர் அரசியல் ரீதியாக பயனடைந்தமையும் இரகசியமல்ல. எனினும், அவர்களுக்கு இன்னும் நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை. இலங்கை முழுவதும் நுண்கடன்களால் பாதிக்கப்பட்டுள்ள வறுமையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் அண்மையில் பொலன்னறுவை ஹிங்குராகொடை பகுதியில் 45 நாட்கள் அமைதிவழி போராட்டத்தில் ஈடுபட்டனர். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கோவிட் -19 தொற்று காரணமாக இப்போராட்டங்கள் கைவிடப்பட்டாலும், இனங்களுக்கிடையில் சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான வலுவான அடித்தளத்தை இந்த போராட்டம் இட்டுள்ளது.

நுண்கடன்களை நிர்வகிக்க மூன்று உறுப்பினர்களைக் கொண்ட சிறிய குழுக்களை கடன் வழங்கும் நிறுவனங்கள் அமைத்தன. ஒரே கிராமத்தில் இரண்டு இனக் குழுக்கள் இருந்தபோதும், இவ்வாறு அமைக்கப்பட்ட குழுக்களில் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களே அங்கம் வகித்தனர். அத்தோடு, ஓர் இனத்தவரின் பிரச்னையை மற்றைய இனத்தவர் பொருட்படுத்துவதில்லை. இந்த பிரிவினை கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு சாதகமாக அமைந்தது.

> **வறுமை காரணமாக இலங்கை முழுவதும் சுமார் 2.8 மில்லியன் மக்கள் நுண்கடன் பொறியில் சிக்கியுள்ளனர். கடன்பட்ட இந்த வறிய மக்களை அரசியல் களத்திற்கு அழைத்து வருவதன் மூலம் சிலர் அரசியல் ரீதியாக பயனடைந்தமையும் இரகசியமல்ல. எனினும், அவர்களுக்கு இன்னும் நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை.**

ஹிங்குராகொடையில் நடைபெற்ற போராட்டத்தால் இந்த நிலை முற்றிலும் மாறிவிட்டது. நுண்கடன்களால் பாதிக்கப்பட்ட பெண்களை அணிதிரட்டுவதில் விவசாய சங்கத் தலைவர் கவுடுல்லே ஜயதிஸ்ஸ முன்னோடியாக செயல்பட்டார். கடன் பெற்ற பெண்களை இப்போது இன, மத பேதமின்றி ஒருங்கிணைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடன் பெற்ற பெண்கள் ஓர் அமைப்பாக ஒருங்கிணைக்கப்பட்ட அதே சந்தர்ப்பத்தில், அவர்களது துணைவர்கள் தனியான ஒரு அமைப்பாக ஒருங்கிணைக்கப்பட்டனர். இதனடிப்படையில், இந்த இரு அமைப்புகளின் பதவிகளும் எவ்வித பாகுபாடுமின்றி பகிரப்பட்டன. இந்த அமைப்புகளில், ஆணொருவர் நாளொன்றிற்கு 10 ரூபாயும் பெண் 5 ரூபாயும் சேமிக்க வேண்டும். சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் உன்னதமான செயற்பாடுகளை இந்த அமைப்புகள் முன்னெடுத்தன.

விவசாயத்தில் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் ஒரு செயற்பாடு எமது விவசாய கலாசாரத்தில் காணப்பட்டது. இதனை 'அத்தம்' முறை என அழைத்தனர். இந்த முறை காலப்போக்கில் இல்லாமல் போயிருந்த நிலையில், இப்போது மக்கள் ஒருங்கிணைப்புடன் மீளவும் வந்துள்ளது. இந்த முறையின் படி, ஒரு நாளைக்கு ஒருவரது பண்ணையில் பலர் ஒன்றாக வேலைசெய்வார்கள். இன்னொரு நாள், இன்னொருவரின் பண்ணையில் அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வேலை செய்வார்கள். விவசாய நிலங்களை தயார்ப்படுத்தும் ஒரு துரித செயன்முறை இதுவாகும். இத்திட்டத்தின் கீழ் சிங்கள மற்றும் முஸ்லிம் ஆண்களும் பெண்களும் ஒன்றாக வேலைசெய்கின்றனர். இது ஒரு கூட்டுறவு அமைப்பை நோக்கிய பயணமாகும்.

இதிலுள்ளவர்கள் அனைவரும் கடன் பட்ட வறிய மக்களே தவிர இன, மத குழுக்களைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்பது இதன் சிறப்பம்சமாகும். கூட்டுறவுகளின் கலாசார மற்றும் சமூக அடிப்படையே 'அத்தம்' செயன்முறை என்பது விவசாய சமூகத் தலைவர் ஜயதிஸ்ஸவின் கருத்தாகும். ஒன்றரை ஏக்கர் பண்ணையை சுமார் 15 பேர் இணைந்து சுத்தம் செய்கின்றனர். இதனால் சுமார் 15 ஆயிரம் ரூபாய் சேமிக்கப்படுகின்றது.

இம்மக்கள் கடனாளிகள். இவர்கள், பல்வேறு பிரச்சினைகள் காரணமாக எழுந்த நிதி ரீதியான சிக்கல்களுக்கு தீர்வுகாண முயற்சிக்கின்றனர். இதனால், சிலரது நெல்வயல்கள் அடகு வைக்கப்பட்டன அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்னைகளை தீர்ப்பதற்கு இந்த கூட்டுறவு இயக்கம் உதவுகின்றது.

ஹிங்குராகொடை தம்பலா பிரதேசத்தைச் சேர்ந்த யூ. ரவுஃப் மற்றும் நலிஃபா ஆகியோர் கணவன் மனைவி ஆவர். இவர்கள் 300,000 ரூபாய் நுண்கடன் பெற்றுள்ளதோடு, அதற்கு 100,000 ரூபாய் வட்டி செலுத்துவதாக உறுதியளித்துள்ளனர். நலிஃபாவின் பெயரிலேயே கடன் வாங்கப்பட்டுள்ளது. ரவுஃபின் ஆலோசனை மற்றும் சம்மதத்தின் பேரில், நலிஃபா இப்போது பெண் கடனாளிகள் சங்கத்தின் ஒரு வலுவான உறுப்பினராக செயற்படுகின்றார்.

"எமக்கு கடன் வழங்கப்பட்டபோது, மூன்று குழுக்களை அமைக்குமாறு கூறினார்கள். முஸ்லிம்கள் மூவர் இக்குழுவில் இணைந்துகொண்டனர். இக்கடன் பற்றி சிங்கள மக்களிடம் நாம் கதைக்கவே இல்லை. ஆனால், ஹிங்குராகொடை போராட்டத்தின் பின்னர் நாம் அனைவரும் சிங்கள மக்களுடன் இணைந்து கொண்டோம். இது

எமக்கு ஒரு புதிய அனுபவத்தைக் கொடுத்தது. இச்சமுதாயத்தின் மூலம் கடன் பிரச்சினையை மாத்திரமன்றி பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வுகாண முடியும்" என்று நலிஃபா குறிப்பிட்டார்.

தம்பல மற்றும் சுங்கவில ஆகிய இரண்டு கிராமங்களிலும் சிங்கள, முஸ்லிம் சமூகங்கள் ஒன்றாக வாழ்கின்றன. இங்கு 120 பேர் கடன்பெற்றவர்கள் ஆவர். எதிர்காலத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களும் இந்த முறையின் கீழ் ஒன்றிணையும். அதற்கான உறுதியான அத்திவாரம் ஏற்கனவே இடப்பட்டுள்ளது.

வெளியிலிருந்து தீர்வு கிட்டும்வரை நீங்கள் காத்திருக்க முடியாது. வினாக்களை கொண்டுள்ள மக்களே அதற்கான பதில்களை கண்டுபிடிக்க வேண்டும். அவ்வப்போது தெரிவுசெய்யப்படும் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் இப்பிரச்னைகளை தமக்கு சாதகமாக மாற்றிக்கொள்கின்றார்களே தவிர, அவற்றிற்கான தீர்வை பெற்றுக்கொடுக்க முன்வருவதில்லை. இந்த யதார்த்தத்தை மக்கள் இப்போது புரிந்துகொண்டுள்ளனர். அதிகார பேராசையுடைய அரசியல்வாதிகளின் எண்ணங்களில் காணப்படும் இன, மத, சாதிப் பிரச்சினைகள் தமக்கு ஒருபோதும் உதவப் போவதில்லை என்பதை மக்கள் உணர்ந்துள்ளமை முக்கியமான விடயமாகும்.

ஹிங்குராகொட நெலும்புர பகுதியில் சிங்கள சமூகமும் முஸ்லிம் சமூகமும் ஒன்றாக வாழ்கின்றன. முஸ்லிம்களே இங்கு பெரும்பான்மையாக வாழ்கின்றனர். நுண்கடன் பெற்றுள்ள நிமாலி என்பவர், இங்கு ஏழு சிங்கள குடும்பங்களும் எட்டு முஸ்லிம் குடும்பங்களும் இணைந்து இப்போது ஒரு சங்கத்தை உருவாக்கியுள்ளதாக குறிப்பிட்டார். "அத்தம்" முறையின் கீழ் விவசாயம் செய்கின்ற அதே சந்தர்ப்பத்தில், இதன் உறுப்பினர்கள் நாளொன்றிற்கு 5 ரூபாய் சேமிக்கின்றனர். நெல்வயல் வேலை முடிந்துவிட்டதோடு, பெரும் போகத்தில் பயிரிடுவதற்கு நிலம் தயாராக உள்ளது.

கோவிட்-19 தொற்றுநோயானது இம்மக்களின் அமைப்பு ரீதியான செயற்பாடுகளை கடுமையாக பாதித்துள்ளது. இல்லாவிட்டால், அவர்கள் வெகுதூரம் முன்னோக்கிச் சென்றிருப்பதோடு, தமது பொருளாதார சிக்கல்களுக்கும் தீர்வு கண்டிருப்பார்கள். அவ்வாறு நடந்திருக்குமாயின் சகவாழ்வும் நல்லிணக்கமும் இன்னும் மேம் பட்டிருக்கும். ■

■ டென்யா சுப்

> “இப்போதைக்கு அதிரடியாக ஒன்றுமே நடக்காது என்பதே உண்மை. “திமுக தவறுசெய் வதற்காகக் காத்திருக்கிறோம், திமுக அந்த வாய்ப்பை வழங்கும்” என்று அன்வர் ராஜா பேட்டியில் சொன்னது போல, அப்படியே அறிக்கை அரசியல் வழி இழுக்கலாம் என்பதே கட்சியின் உத்தி என்கிறார்கள்.



# அ.தி.மு.கவுக்குள் என்ன நடக்கிறது?

தமிழ்நாட்டின் 24 மணி நேரக் தொலைக் காட்சிகள் அதிமுகவுக்குள் ஏதோ பூகம்பம் நடப்பது போன்ற பாவனை உருவாக்கிக்கொண்டி ருந்தாலும், எந்தச் சலனமும் இல்லாமல் அதிகாரத்தைத் தன் கைகளுக்குள் உறுதிபடுத்திக்கொண்டிருக்கிறார் பழனிசாமி.

அதிமுகவுக்குள் இப்போது நிலவும் பேச்சு இதுதான். இரட்டைத் தலைமை - ஒருங்கிணைப்பாளர் பதவி பன்னீர்செல்வத்துக்கு இணை ஒருங்கிணைப்பாளர் பதவி பழனிசாமிக்கு என்று சமீபத்திய தேர்ந்தெடுப்பு நடந்து முடிந்திருந்தாலும், கட்சி முழுமையாக பழனிசாமி கைக்குள் உறுதிசெய்யப்பட்டிருக்கிறது!

அப்படியென்றால், பழனிசாமியின் தலைமை எல்லோராலும் விரும்பப்படுகிறதா? என்று கேட்டால், இல்லை என்றும், சரியான தருணத்தில் பழனிசாமியை வீழ்த்த பலரும் காத்திருக்கின்ற னர் என்றும் பதில் கிடைக்கிறது. அப்படியென்றால், என்னதான் நடக்கிறது அதிமுகவுக்குள்?

### உறுதிபட்ட அதிகாரம்

ஆட்சியதிகாரத்தோடு ஜெய லலிதா மறைந்துவிட்ட நிலையில், பன்னீர்ச் செல்வத்தின் வீழ்ச்சி அடுத்து சசிகலாவின் வீழ்ச்சி என்று அடுத்தடுத்து அடிகளால் பாதிக்கப்பட்டிருந்த அதிமுகவினர் எப் படியேனும் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள விரும்பினர். பழனிசாமி முதல் வர் பத வியை ஏற்றபோது பலருக்கும் இவர் ஓராண்டுக்கேனும் நிலைப் பாரா என்ற கேள்வியே இருந் தது. பழனிசாமி நிலைத்திருந்தார்.

அடுத்தடுத்த தேர்தல்களுக்கு ஈடுகொடுப்பாரா என்பதையெல்லாம் தாண்டி, இந்த ஆட்சியை முழு மையாகக் கொண்டுபோய் கரைக்குச் சேர்ப்பாரா என்ற கேள்விக்கு விடை கிடைத்ததையே அதிமுகவினர் பெரிய வெற்றியாகக் கருதினர். கூடுதலாக பழனிசாமி ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி, பன்னீர்செல்வத் தையும், தினகரனையும் ஒதுக்கிவிட்டு, தன்னை ஒரு ஆளுமையாகவும் கட்டமைத்துக்கொள்ள முற்பட்ட போது, அடுத்து ஓர் உறுதியான தலைவர் கிடைத்து விட்டார் என்றே அதிமுகவினர் நம்ப ஆரம்பித்தனர்.

2019 மக்களவைத் தேர்தல் அதிமுகவினருக்கு ஒரு விஷயத்தை உறுதியாக்கிவிட்டது. அதிமுக ஆட்சி நிலைக்காது என்பதே அது. ஆனாலும், கட்சி கரைந் திடாமல் இருக்கவும் தேர்தலை எதிர்கொள்ளவும் பழனிசாமியை விட்டால் வழி இல்லை என்பதில் உறுதியாக இருந்தனர். பழனிசாமி வேறு எவரும் எடு படாமல் பார்த்துக்கொண்டார்.

### பணமும் அதிகாரமும்

கட்சியில் கீழே பழனிசாமி தலைமையில் இரு மாற்றங்கள் நடந்தன. ஒன்று பணம் பாய்ந்தது, மற்றொன்று அவரவர் பதவியின் எல்லைக்குட்பட்டு கொஞ்சம்போல அதிகாரத்தை ருசிக்க முடிந்தது. முன்னதாக எம்ஜிஆர் - ஜெயலலிதா காலத்தில் எப்போதும் கண்காணிப்பின் பிடியிலேயே வளர்ந் துவந்த கட்சியினருக்கு கொஞ்சம் சுதந்திரக் காற்றை சுவாசிப்பதுபோல இருந்தது பிற்பாடு அதிகாரம் தன் பிடிக்குள் முழுமையாக வந்தபோது பழனிசாமியும் மாறலானார் என்றாலும், மூச்சுவிட இடம் இருந்தது.

பழனிசாமியைச் சுற்றி சாதி வட்டமும், பிம்பமும் இருந்ததால் பெரும்பான்மை சாதிகளை அவர் அனுசரிக்க வேண்டியிருந்தது. இது கீழே அந்தந்தச் சாதிப் பின்னணியைக் கொண்ட தலைவர்களுக்குக் கூடுதல் அதிகாரத்தையும் வலுவையும் தந்தது. அதேபோல மூத்தத் தலைமுறைத் தலைவர்களை உந்தித் தள்ளிவிட்டு, அடுத்த தலைமுறைத் தலைவர் வேகமாக நகர முடிந்தது. உதயகுமார் அல்லது சண்முகம் போன்றோர் இதற்கு நல்ல உதாரணங்கள்.

### சரிவும் செல்வாக்கு

சட்டமன்றத் தேர்தல் தோல்வி எதிர்பாராதது இல்லை என்றாலும், தேர்தலுக்குப் பின் இப்படி பழனிசாமி சுருங்கிப்போவார் என்பதை அதிமுகவினர் எதிர்பார்க்கவில்லை. 2016 தேர்தலுக்குப் பின் திமுகவை ஸ்டாலின் எப்படித் துடிப்பாக வைத்திருந்தார் என்பதே இப்போது அதிமுகவுக்குள் அதிகம் பேசப்படுகிறது.

திமுகவைப் போல துடிப்பான செயல்பாட்டுக்குப் பேர் போன கட்சியல்ல அதிமுக என்றாலும், எம்ஜிஆர் - ஜெயலலிதா இருவரும் கட்சி அமைப்பை வலுவாக வைத்திருந்தார்கள். கட்சிக்குள் அவர்களுடைய செல் வாக்கு கேள்விக்கு அப்பாற்பட்டதாகவே இருக்கும். இப்போதைய பிரச்சினை, அத்தகு செல்வாக்கை பழனி சாமியால் உருவாக்கிக்கொள்ள முடியவில்லை என்பதே ஆகும். பழனிசாமியை விட்டால் இப்போதைக்கு வேறு ஆள் இல்லை என்பதும், தேர்தல் ஆணைய நடை முறைகளின்படி கட்சி சட்டமன்ற அதிகாரத்தின் வழி பழனிசாமி கைகளில் இருக்கிறது என்பதுமே அவரது தலைமையைத் தக்க வைத்திருக்கிறது.

### கசியும் ரத்தம்

கட்சியின் இப்போதைய பெரும் சவால், செயல் பாட்டாளர்களை எப்படித் தக்கவைப்பது என்பதுதான் என்கிறார்கள் அடுத்தகட்ட தலைவர்கள். அதிமுக வோடு தங்களை அடையாளப்படுத்திக்கொண்ட தொண்டர்கள் என்றும் இங்கே நிலைத்திருப்பார்கள் பிரச்சினை என்னவென்றால், தலைமைப் பொறுப்புக ளில் இருப்பவர்களில் கணிசமானவர்கள் அதிகாரக் கணக்கோடு கட்சியில் நீடிப்பவர்கள். ஏனென்றால், எப்படியாயினும் கட்சியோடு பிணைந்திருக்க இது சித் தாந்த அடிப்படையிலான கட்சி கிடையாது. கவர்ச் சிகரத் தலைவர்களும், அடுத்த தேர்தலில் வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையுமே இங்கு பசை. இரண் டும் இல்லாததால், பலர் வெளியேறும் முடிவுக்கு நகர்கிறார்கள் என்கிறார்கள்.

உள்ளாட்சித் தேர்தலில் 95% தோல்வியைக் கட்சி தழுவியது கட்சியினரை உள்ளுக்குள் நிலைக்குலைய வைத்திருக்கிறது. பணத்தோடு, செயல்படவும் தயாராக இருக்கும் இவர்களை இரு கட்சிகள் இன்று இழுக்கின் றன. ஒன்று, மாநிலத்தை ஆளும் தி. மு. க., மற்றொன்று டெல்லியை ஆளும் பாஜக. பழனிசாமியை இது பதற்றத்தில் ஆழ்த்தாமல் இல்லை.

இப்போதுள்ள அமைச்சர்களில் 8 பேர் அதிமுக முன்னாள் அமைச்சர்கள். “நம் எம்எல்ஏக்களில் 15 பேர் அங்கே எம்எல்ஏக்களாக இருக்கிறார்கள். நம் கட்சியினரையே விலைக்கு வாங்கி நம்மையே அழிக்கப்பார்க்கிறார்கள்” என்று ராணிப்பேட்டையில் நடந்த அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் வெளிப்படையாகப் பேசினார் பழனிசாமி. அதற்குப் பிறகும் இன்னும் அதிகமானோர் கட்சி மாறியிருக்கிறார்கள். நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்குப் பின் இந்த எண்ணிக்கை இன்னும் உயரக்கூடும் என்று சொல்லப்படுகிறது.

### பன்னீர்செல்வத்தின் பரிதவிப்பு

அதிமுகவின் இரட்டைத் தலைமைக்குள்ளான மோதல் ஊரறிந்த விஷயம். பன்னீர்செல்வம் துணிச் சல்காரராக இருந்தால் இப்போது அவர் தலையெடுக்க முடியும். ஆனால், தன்னையே காப்பாற்றிக்கொள்ளப் போராடும் நிலையிலேயே அவர் இருக்கிறார். சசி கலாவைக் கட்சியில் சேர்ப்பது தொடர்பில் கலந்தா லோசிக்கலாம் என்ற அவருடைய பேச்சே உளமார்ந்த விருப்பத்தால் இல்லல் பழனிசாமியை மிரட்டுவதற்கான ஆயுதமாகவே சசிகலா பெயரைப் பயன்படுத்துகிறார் என்றே கட்சிக்குள் நம்புகிறார்கள். பன்னீர்செல்வத்தின் ஆதரவாளர்களாக இருந்த எவர் நீக்கப்படும்போதும் அவரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. பன்னீர்ச் செல் வத்தை வெளியேற்றினால், சட்டரீதியான பிரச்னை கட் சிக்கு மீண்டும் ஏற்படலாம் என்பதாலேயே அவரை பழனிசாமி அனுசரிக்கிறார்.

அதிமுகவின் அடுத்தகட்டத் தலைவர்கள் மத்தியில் இவை எல்லாமும் பேசப்படுகின்றன. சரியான தருணம் வாய்க்கும்போது யாரேனும் மேலெழுந்து வரலாம் என்ற எதிர்பார்ப்பே எல்லோரையும் காத்திருக்க வைத்திருக்கிறது. சமீபத்தில் அன்வர் ராஜா கலகக் குரல் எழுப்பியபோது, கட்சியின் அடுத்தகட்டத் தலைவர்கள் பலரும் அவருக்கு ஆதரவாக அவரிடம் பேசியிருக்கிறார் கள் என்பதை அறிய முடிகிறது. இப்போதைக்கு எதிர்க் குரல் கொடுத்தாலும் ஆகப்போவது ஒன்றும் இல்லை மக்களவைத் தேர்தல் நெருங்கும் சமயத்தில் காய்களை நகர்த்தலாம் என்பதே பலரின் எண்ணமாக வெளிப்படுகிறது.

### அடுத்து என்னவாகும்?

இப்போதைக்கு அதிரடியாக ஒன்றுமே நடக்காது என்பதே உண்மை. “திமுக தவறுசெய்வதற்காகக் காத்திருக்கிறோம், திமுக அந்த வாய்ப்பை வழங்கும்” என்று அன்வர் ராஜா பேட்டியில் சொன்னதுபோல, அப்படியே அறிக்கை அரசியல் வழி இழுக்கலாம் என்பதே கட்சியின் உத்தி என்கிறார்கள். இதுதான் உத்தி என்றால், கட்சி கொஞ்சம் கொஞ்சமாகக் கரைவதை எவரும் தடுக்க முடியாது! ■

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை
வி னாத்தான்

நேரம் : 1 மணித்தியாலம்

05. சந்திரன் தோன்றாத ஒரு நாளில் நள்ளிரவில் வீட்டிலிருந்து வெளியே வந்து வானத்தைப் பார்க்கும்போது தொலைவில் உள்ள வானில் பறந்து செல்லும் கிளிக் கூட்டத்தைக் காணலாம் எனக் காவியா கூறுகின்றாள். இது நடைபெற இயலாது இதற்குக் காரணம்

(1) இருளில் அத்தகைய ஒரு நிகழ்ச்சியைப் பார்க்க முடியாமை.
(2) இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை.
(3) கிளிகள் கூட்டமாகப் பறந்து செல்லாமை.

06. உருக்கோலத்தில் அடுத்து வரவேண்டிய உருவைத் தெரிக.





07. உலக மரபுரிமை மையங்களாக ......................... நிறுவனத்தால் இலங்கையில் பாரம்பரிய இடங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்டன. அவற்றுள் பொலன்னறுவை புராதன நகரம், அனுராதபுரம் புனிதநகரம், சிகிரியா புராதன நகரம், .............................. போன்றவை சில இடங்களாகும்.

முதலாம் வெற்றிடத்திற்கும் இரண்டாம் வெற்றிடத்திற்கும் முறையே மிகப் பொருத்தமான சோடிச் சொற்களை தெரிவு செய்க.

(1) யுனிசெப், காலிக்கோட்டை
(2) யுனேஸ்கோ, யாழ்கோட்டை
(3) யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்)

08.




கீழுள்ள முக்கோண வடிவில் பக்கமொன்றின் எண்கள் மூன்றைக் கூட்டும் போது 18 வரக்கூடியதாக 4, 6, 10, 12 ஆகிய எண்களினால் வெற்றுக் கூடுகளை நிரப்புக.

(1) A - 12, B - 14, C - 4, D - 8
(2) A - 10, B - 12, C - 4, D - 6
(3) A - 10, B - 12, C - 6, D - 4

- **பின்வரும் கவிதையை வாசித்து 09, 10 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிக.**

தேசம் நமது தெய்வம் - இதைத்
தெரிந்து கொள்ளும் தம்பி
பாசம் எல்லாம் கொட்டி - அதைப்
பாதுகாக்க வேண்டும்

பாட்டன், பாட்டி வாழ்ந்த - எங்கள்
பரம்பரைகள் வாழ்ந்த
நாட்டை வணங்க வேண்டும் - அதன்
நாமம் போற்ற வேண்டும்.

09. இக்கவிதை புலப்படுத்துகின்ற பிரதான கருத்து யாது?

(1) கடவுள் பக்தி (2) நாட்டுப் பற்று (3) பரம்பரைப் பற்று


10. இக்கவிதையில் வரும் **தேசம், பாசம், நாமம்** ஆகிய சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடிய சொற்கள் முறையே

(1) பூமி, வாஞ்சை, திருமுகம்
(2) நாடு, விருப்பம், திலகம்
(3) நாடு, நேயம், பெயர்

11. அருகருகே அமைந்துள்ள மூன்று முழு எண்களின் கூட்டுத் தொகை 126 ஆகம். எனின் அவ் மூன்று எண்களுள் மிகப் பெரிய எண் யாது?

(1) 41 (2) 42 (3) 43


12. ஆறு பக்கங்களில் **A, B, C, D, E, F** எழுத்துக்கள் ஓர் எழுத்து என்றவாறு குறிப்பிடப்பட்டுள்ள தாயக்கட்டையொன்றின் மூன்று அமைவுகள் கீழே தரப்பட்டுள்ளன.




அவ் தாயக்கட்டையில் **D** என்ற எழுத்து குறிக்கப்பட்ட பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்திலே உள்ள எழுத்து எது?

(1) A (2) B (3) E

## விடைகள்

| | | |
|---|---|---|
| 05. | (2) | இரவில் கிளிகள் பறந்து செல்ல வேண்டிய தேவை இல்லை. |
| 06. | (2) |  |
| 07. | (3) | யுனெஸ்கோ, தங்கக்கோயில் (கோல்டன் டெம்பிள்) |
| 08. | (3) | A - 10, B - 12, C - 6, D - 4 |
| 09. | (2) | நாட்டுப் பற்று |
| 10. | (3) | நாடு, நேயம், பெயர் |
| 11. | (3) | 43 |
| 12. | (1) | A |

# மாணவர்களில் 500 பேர் கொரோனாவால் பாதிப்பு

## ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 11

நாட்டிலுள்ள சுமார் 40 இலட்சம் பாடசாலை மாண வர்களில் 500 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ள னர் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"பாடசாலைகளில் கொரோனா கொத்தணிகள் எதுவும் உருவாகவில்லை.

நாட்டிலுள்ள சுமார் 40 இலட் சம் பாடசாலை மாண வர்களில் 500 பேர் கொரோனா வைரஸ ால் பாதிக்கப்பட்டுள் ளனர்.

வீட்டுச் சூழலிலிருந்து ஏரா ளமான மக்கள் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.

பாடசாலை மாணவ, மாண வியர் மத்தியில் கொரோனாத் தொற்று வேகமாகப் பரவுவ தில்லை. பாடசாலைகளில் சுகாதார வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றினால் கொத்தணிகள் உருவாக வாய்ப்பில்லை" - என்றார்.

இதற்கிடையில், பாடசாலை களில் கொரோனா சுகாதார வழிகாட்டல்கள் முறையாக அமல் படுத்தப்படவில்லை என்று ஆசிரியர் சங்கங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன.

மேலும், பாடசாலைகளில் கொத்தணிகள் உருவாகலாம் என்றும், மீண்டும் பாடசாலை களை மூட வேண்டிய நிலை ஏற்படும் என்றும் பொதுச் சுகா தார அதிகாரிகள் தெரிவித் திருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# மின்சார வேலியில் சிக்கி பெண் மரணம்

கொழும்பு, டிசெ. 11

மின்சார வேலியில் சிக்கி இரு பிள்ளைகளின் தாய் உயிரி ழந்துள்ளார்.

தலவாக்கலை பொலிஸ் பிரி வுக்குட்பட்ட தலவாக்கலை சுரங்கப்பாதைக்கு கீழ் உள்ள சாந்த ஜனபதய எனும் பகுதி யில் வீட்டுக்குப் பின்புறத்தில் மரக்கறி தோட்டத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கியே மேற்படி தாய் மரணமடைந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத் தில் உயிரிழந்தவர் ஏ.எம்.சந்திர லதா (வயது 48) என அடை யாளம் காணப்பட்டுள் ளார்.

குறித்த வீட்டார்கள் தங்க ளது மரக்கறித் தோட்டத்தை மிருகங்களிடமிருந்து பாதுகாப் பதற்காக மின்சார வேலியை சட்டவிரோதமாகப் பொருத் தியுள்ளனர்.

குறித்த பெண் ஒவ்வொரு நாளும் தோட்டத்துக்குச் செல்லும்போது மின்சாரத்தைத் துண்டித்து விட்டுச் செல்வது வழமை எனவும், நேற்றுமுன் தினம் அதனைத் துண்டிக்காது மறந்து சென்றதால் குறித்த சம்பவம் இடம்பெற்றிருக்க லாம் எனவும் பிரதேசவாசிகள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவரின் சடலம் நீதிவானின் மேற்பார்வையின் பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத் தியசாலைக்கு அனுப்புவதற் கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதாக தலவாக் கலைப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர் பாக மேலதிக விசாரணை களைத் தலவாக்கலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# நீதிமன்றத்தை அவமதித்த ஞானசாரர் தலைமையில் செயலணி தேவைதானா?

## சபையில் தலதா அத்துகோரள எம்.பி. சீற்றம்

கொழும்பு, டிசெ. 11

**"ஒரே நாடு - ஒரே சட்டம்" செயலணியின் தலைவராக நியமிக்கப் பட்டுள்ள ஞானசார தேரரின் செயல்பாடுகள் பிரச்சினைக்குரியன என் றும், அவரால் அச்சுறுத்தல் விடுப்பதைப் போன்று வெளியாகியுள்ள குரல் பதிவு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் உரை யாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"தற்போது ஒரே நாடு - ஒரே சட்டத்துக்கான ஆலோசனைக ளைப் பெற்றுக்கொள் வதற்காக செயலணி அமைக்கப்பட்டுள் ளது. இதற்கு முன் னர் 2018 ஒக் ரோபர் மாதத்தில் அரச மைப்பை மீறி சூழ்ச்சிகள் மூலம் அப்போது இருந்த அர சைக் கவிழ்த்தனர். இந்நிலையில், இந்தச் செயல ணிக்குத் தகுதி யில்லாதவர்களை நியமித்து நீதிமன்றத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்கியுள்ளனர்.

ஒரே நாடு ஒரே சட்டத்தை அமைப்பதற்கான செயலணி யின் தலைவராக நியமிக்கப்பட டுள்ள தேரர் நீதிமன்றத்தை அவமதிப்பு குற்றச்சாட்டிலும் மற்றும் அமைதியின்மையான வகையிலும் நடந்துகொண் டமையால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு ஜனாதிபதியால் விடுதலை செய்யப்பட்ட வராவார்.

இந்தச் செயலணி தொடர் பில் எவ்வாறான நிலைப்பாடு இருந்தாலும் அதற்கு நியமிக் கப்பட்டுள்ள தேரர் தொடர் பில் மகிழ்ச்சியடைய முடி யாது. இவர் தொடர்பில் பல் வேறு குரல் பதிவுகள் வெளியா கியுள்ளன.

இந்தச் சபையில் இருக்கும் பௌத்த எம்.பிக்கள் அனை வரும் என்னுடன் இணங்குவர்



என்று நினைக்கின்றேன். இது பௌத்த தர்மத்தைப் பின் பற்று வோருக்குப் பெரும் குழப்பமாக இருக்கின்றது. இவர் அச்சுறுத் தல்களை விடுக்கின்றார்.

நாங்கள் பௌத்தர்கள் என்ற ரீதியில் அனைத்து எம்.பிக்களும் வேறு மதத்தவர்களும் இந்த விட யத்தில் என்னுடன் இணங்குவர். தேரர்களின் உரிமைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த குரல் பதிவு சர்வ தேசத்துக்குச் செல்லும் நிலையில் இருக்கின்றது. இது தொடர்பில் ஜனாதிபதி எடுக் கும் நடவடிக்கை என்ன? தமது மதத்தின் பிக்குகளுக்கே இவ் வாறான நிலைமை ஏற்பட் டிருக்கையில் மற்றைய மதத் தைச் சேர்ந்தோரின் நிலை என்னவாக இருக்கும்.

இதேவேளை, வெளிவிவ கார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மத்திய கிழக்குத் தூதுவர்களை அழைத்து தனிப்பட்ட சட்டங் களுக்குப் பாதிப்பு இல்லாத வாறே "ஒரே நாடு - ஒரே சட் டம்" நடக்கும் என்று கூறியுள் ளார். அவ்வாறு தனிப்பட்ட சட்டத்துக்கானது அல்லவென் றால் எதற்காக இந்தச் செயல ணியை நியமிக்க வேண்டும்?

எவ்வாறான விடயங்களை முன்னெடுத்தாலும் நீதி அமைச் சரே அதனைப் பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்க வேண்டும். அமைச்சரும், அமைச்சின் அதி காரிகளும் சட்ட திருத்தங்களுக் காகப் பங்களிக்கின்றனர். இத னால் அனைவரினதும் உரிமை களையும் பாதுகாக்கும் வகை யில் ஆராய்ந்து நடவ டிக்கை எடுக்குமாறு கேட்கின்றோம்" - என்றார். (இ)

# முட்டையின் விலை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 11

நாட்டில் முட்டை ஒன்றின் விலை 30 ரூபா வரை அதிகரித் துள்ளது.

முட்டை ஒன்றின் விலையை 30 ரூபா வரை அதிகரிக்க வேண் டிய நிலைக்கு தாம் தள்ளப்பட் டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியா ளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

விலங்குகளுக்கான தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வும், விலங்குணவின் விலை இரண்டு மடங்காக அதிகரித் துள்ளதாகவும் அவர் குறிப்பிட் டுள்ளார்.

கடந்த வாரத்தில் கோழி இறைச்சியின் விலை 840 ரூபா வரை அதிகரித்து இருந்தாலும், இப்போது 650 ரூபாவரை குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (இ)

# வடக்கில் மைதானங்கள் இல்லாத நிலைமை!

## அரசின் அக்கறையின்மை என்று வினோ எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 11

வடக்கு மாகாணத்தில் மைதானங்கள் இல்லாத நிலைமை உள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோ கராதலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடை பெற்ற இளைஞர் மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற் றுகையிலேயே மேற்கண்ட வாறு வலியுறுத்திய அவர், மேலும் கூறுகையில்,

"முல்லைத்தீவு மாவட்டத் திலே அரச அதிகாரிகளின் அக்கறையின்மையால் அங்கு மாவட்டத்துக்குரிய ஒரு மைதானத்தைத் தெரிவு செய்து சகல வளங்களையும் கொண்ட மைதானத்தை உருவாக்க முடி யாத நிலை உள்ளது. இதே போன்று மன்னாரிலும் எமில் நகர் கிராமத்திலும் கடந்த காலத்தில் விளையாட்டுத்துறை அமைச்சராக தயாசிறி ஜயசேகர இருந்தபோது அங்கு ஒரு விளையாட்டு மைதானம் புனர மைப்புச் செய்து அதனை சகல தரம் கொண்ட மைதானமாக உருவாக்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஏறக்குறைய 5 கோடியே 9 இலட்சம் ரூபா நிதி கணிப் பிடப்பட்டு ஒன்றரைக் கோடி ரூபா செலவு செய்யப்பட்ட நிலையில் நிதி ஒதுக்கீடுகள் நிறுத்தப்பட்டதால் - ஒப்பந் தக்காரர்கள் விலகியதால் மிகுதி வேலைகள் கைவிடப்பட்டுள் ளன. ஆகவே, அந்த மைதானப் புனரமைப்புப் பணிகள் மீண் டும் ஆரம்பிக்கப்பட வேண் டும். அதற்கான நிதியை அரசு விடுவிக்க வேண்டும்.

அதேபோல் வடக்கு மாகா ணத்துக்கான ஒரு மைதானம் கிளிநொச்சியில் சர்வதேச தரத்தில் அமைக்கப்பட தொடங்கிய நிலையில் இன்ன மும் முற்றுப்பெறவில்லை. அந்த மைதானத்தில் வடக்கு மாகாணத்துக்குரிய விளை யாட்டுத் திணைக்களத்தை நிறுவ வேண்டும் என்றும், அந்த மைதானத்தில் 2015ஆம் ஆண்டுக்குரிய தேசிய விளை யாட்டுப் போட்டிகள் நடை பெறும் என்றும் 2014ஆம் ஆண்டு அப்போதைய விளை யாட்டுத்துறை அமைச்சராக விருந்த மஹிந்தானந்த அளுத் கமகே தெரிவித்திருந்தார். ஆனால், இதுவரைக்கும் 7, 8 வருடங்கள் கடந்தும் கூட அந்த மைதான அமைப்பு வேலைகள் முடிவுறுத்தப்படவில்லை.

வடக்கு மாகாணத்துக்கென அந்த மைதானம் சகல வசதிக ளையும் கொண்டதாக அங்கு உருவாக்கப்பட வேண்டும். அதேபோல் வடக்கு மாகாணத் துக்குரிய விளையாட்டுத்



திணைக்களம், அதனுடைய செயல்பாடுகளை வடக்கு மாகா ணத்துக்கு மத்திய ஸ்தானமாக இருக்கின்ற கிளி நொச்சிக்கு அந்த மைதானத் தோடு இணைந்ததாக கொண்டு செல்ல வேண்டும். அதேபோல் அந்த மைதா னத்தை எதிர்காலத்தில் முழு மையாக பராமரிப்பதற்கும் ஏனைய விடயங்களுக்கும் வடக்கு மாகாண சபையிடம் கையளிக்க வேண்டும்.

அதேவேளை, இன்னொன் றையும் நான் குறிப்பிட வேண் டும். கடந்த 2020 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜனாதிபதி ஒரு இலட்சம் வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிவித்தார். இதில் முன்னாள் போராளிகள், காப்ப கங்களில் இருக்கின்ற இளம் மகளிர், அதேபோல் சுகாதாரத் தொண்டர்களுக்கு எந்தவித அரசியல் தலையீடுகளுமின்றி, பாகுபாடுகளுமின்றி இலஞ்ச, ஊழல் இன்றி முன்னுரிமைய ளிக்கப்படும் எனக் கூறியிருந்த போதும் அதற்கு நேர்மாறாக அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் சிபார்சுகளில் தான் அந்தத் தெரிவுகள் நடை பெறுகின்றன. உண்மையில் யாருக்கு அந்த வேலைவாய்ப் புக்கள் வழங்கப்பட வேண் டுமோ அவர்களுக்கு வழங் கப்படவில்லை. அரசியல் ரீதியாகவே வேலைவாய்ப் புக்கள் வழங்கப்படுகின்றன. எனவே, இது உடனடியாக தடுக்கப்பட வேண்டும்" - என்றார். (இ)

# 2022 பீஜிங் ஒலிம்பிக்கை பகிஷ்கரிக்காது பிரான்ஸ்

## மக்ரோன் அதிரடி அறிவிப்பு

பாரிஸ், டிசெ. 11

2022ஆம் ஆண்டு பீஜிங்கில் நடைபெறவுள்ள குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளை இராஜதந்திர ரீதியாக புறக்கணிக்கும் திட்டம் எதுவும் பிரான்சுக்கு இல்லை என ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

அத்தகைய எந்த நடவடிக்கையும் முக்கியமற்றதாகவும் வெறும் அடையாளமாகவும் இருக்கும் என மக்ரோன் கூறினார்.

அத்துடன், ஒலிம்பிக்கை அரசியலாக்கக்கூடாது என்றும், பயனுள்ள விளைவை கொண்ட செயல்களை தான் விரும்புவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதற்கிடையில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்டெரெஸ், விளையாட்டுகளின் ஆரம்ப விழாவில் கலந்துகொள்வதற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டதாகக் கூறினார்.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா மற்றும் அவுஸ்ரேலியா ஆகிய நாடுகள், சீனாவின் மனித உரிமைகள் பதிவு குறித்த கவலைகள் காரணமாக குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு அரசாங்கப் பிரதிநிதிகளை அனுப்பப் போவதில்லை என்று கூறியுள்ளன.

உய்குர்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கு எதிரான துஷ்பிரயோக குற்றச்சாட்டுகளும் இதில் அடங்கும்.

ஹொங்கொங்கில் அரசியல்



சுதந்திரம் மீதான ஒடுக்குமுறை மற்றும் சீன ரென்னிஸ் வீராங்கனை பெங்ஹூவாய் பற்றிய கவலைகள் தொடர்பாகவும் முறுகல் நிலை நீடிக்கின்றது. (அ)



## ஹெலி விபத்தில் இறந்தோர் உடல்களை அடையாளம் காண்பதில் பெரும் சிக்கல்!

புதுடில்லி, டிசெ. 11

இந்திய முப்படை தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் உள்ளிட்டோர் பயணித்த ஹெலிகப்டர் விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் உடல்களை அடையாளம் காண்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

உடல்கள் மோசமாக சிதைந்துள்ளதாலும் எரிந்து கருகியுள்ளதாலும் அடையாளம் காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும் உடல்களை அடையாளம் காணும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களின் அன்புக்குரியவர்களுக்கு இது ஓர் உணர்வுபூர்வமான விவகாரம் என்பதால் எந்த உடல் யாருடையது என்பதை அடையாளம் காண்பதற்குத் எங்களால் ஆன அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம் என இந்திய இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனரல் பிபின் ராவத் அவரது மனைவி மதுலிகா ராவத் மற்றும் பிரிகேடியர் லக்பிந்தர் சிங் லித்தர் ஆகியோரது உடல்கள் மட்டுமே இப்போது அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடையாளம் காணப்படாத சடலங்கள் டில்லியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன. சடலங்களை அடையாளம் காணும் நோக்குடன் உயிரிழந்தவர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் டில்லிக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன எனவும் என இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது.

அறிவியல்பூர்வமான முயற்சிகள் மட்டுமல்லாது உடல்களை அடையாளம் காண்பதற்கு நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் உதவியும் நாடப்படும். எந்த உடல் யாருடையது என்று அடையாளம் உறுதி செய்யப்பட்ட பின்னர் அவர்களது குடும்பத்திடம் இறந்தவர்களின் உடல் ஒப்படைக்கப்படும் என இந்திய இராணுவத் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (அ)



## எதிர்காலத் தலைமுறை புகை பிடிப்பதற்கு தடை

### நியூஸிலாந்தில் புதிய சட்டம்

வெலிங்டன், டிசெ. 11

புகைப் பிடிப்பதை முடிவுக்கு கொண்டு வருவதற்கு ஒரு தனித்துவமான சட்டத்தை நியூஸிலாந்து அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த சட்டம், 14 வயது மற்றும் அதற்கு குறைவானவர்கள் வாழ்நாள் முழுவதும் புகைப் பிடிப்பதை தடை செய்கிறது.

அடுத்த ஆண்டு முதல் அமுலுக்கு வரும் இந்த சட்டம் ஆண்டுதோறும் சிகரெட் வாங்குவதற்கான குறைந்தபட்ச வயதை அதிகரிக்க வகை செய்யும்.

இந்த சட்டம் அமுலுக்கு வந்து, 65 ஆண்டுகளுக்கு பிறகும் கடைகளுக்கு சென்று சிகரெட் வாங்க முடியும். ஆனால் அவர்கள் தங்களுக்கு 80 வயதாகிவிட்டது என்பதற்கான ஆதாரத்தை வழங்க வேண்டும்.

ஆனால் நடைமுறையில் பல தசாப்தங்களுக்கு முன்பாகவே சிகரெட் பிடிக்கும் பழக்கம் மறைந்துவிடும் என்று அதிகாரிகள் நம்புகின்றனர்.

இதன்மூலம் 2008ஆம் ஆண்டுக்கு பின்னர் பிறந்தவர்கள் சிகரெட்டுகளோ, பிற புகையிலைப் பொருட்களோ தங்கள் வாழ்நாளில் வாங்க முடியாமல் போய் விடும்.

2025ஆம் ஆண்டுக்குள் அந்த நாட்டில் புகைபிடிப்போர் வீதத்தை 5 சதவீதமாக குறைக்க இந்த சட்டம் வழிகாட்டும். (அ)

## எத்தியோப்பியாவில் 2 நகரங்களில் உணவு விநியோகம் இடைநிறுத்தம்

### உலக உணவுத் திட்டம் அறிவிப்பு

அடிஸ் அபாபா. டிசெ. 11

வடக்கு எத்தியோப்பியாவின் இரண்டு நகரங்களில் சேமித்து வைக்கப்பட்டிருந்த களஞ்சியசாலைகளில் கொள்ளையர்கள், கொள்ளையடித்ததை அடுத்து உணவு உதவி விநியோகத்தை உலக உணவுத் திட்டம் நிறுத்தி வைத்துள்ளது.

வடக்கு அம்ஹாரா பிராந்தியத்தில் உள்ள இரண்டு மூலோபாய நகரங்களான கொம்போல்சா மற்றும் அருகிலுள்ள டெஸ்ஸி ஆகியவற்றில் உணவு விநியோகத்தை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

டிக்ராயன் படைகளின் கொள்ளையர்கள், கொம்போல்சா நகரில் உதவிப் பணியாளர்களை துப்பாக்கி முனையில் பிடித்து வைத்திருந்ததாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

சில ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு உட்பட பெரிய அளவிலான அத்தியாவசிய உணவுப் பொருட்களை அவர்கள் திருடிச் சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக உணவுத் திட்டத்தை நடத்தும் ஐ.நா.வின் செய்தித் தொடர்பாளர், அங்குள்ள ஊழியர்கள் தீவிர மிரட்டலை எதிர்கொண்டதாக கூறியுள்ளார்.

மேலும், ஆயுதப் படைகளால் மனிதாபிமான ஊழியர்களுக்கு இத்தகைய துன்புறுத்தல் ஏற்றுக்கொள்ள முடியாதது. இது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் நமது மனிதாபிமான பங்காளிகள் அனைவருக்கும் மிகவும் தேவைப்படும் போது உதவிகளை வழங்குவதற்கான திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என கூறினார்.

வடக்கு எத்தியோப்பியா டிக்ராயன் மற்றும் அரசாங்கப் படைகளுக்கு இடையே நடந்து வரும் உள்நாட்டுப் போருக்கு மத்தியில் பாரிய பட்டினியை எதிர்கொள்கிறது.

ஒரு வருடத்திற்கும் மேலான சண்டைக்குப் பிறகு, ஒன்பது மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு முக்கியமான உணவுப் பொருட்கள் தேவைப்படுகின்றன என ஐ.நா. தெரிவித்துள்ளது.

டிக்ரே கிளர்ச்சியாளர்களிடமிருந்து நகரங்களை மீட்டதாக எத்தியோப்பிய அரசாங்கம் சமீபத்தில் அறிவித்தது. ஆனால், தாங்கள் கைவிடப்பட்ட பகுதிகளை மட்டுமே இராணுவம் மீட்டுள்ளதாக கிளர்ச்சியாளர்கள் தெரிவித்தனர். (அ)





## குடியேற்றவாசிகளை ஏற்றிச் சென்ற சரக்கு லொறி பாலத்துடன் மோதியது!

### மெக்சிக்கோவில் 53 பேர் பலி!!

மெக்சிக்கோ சிற்றி, டிசெ. 11

மெக்சிக்கோவில் சட்டவிரோத குடியேற்றவாசிகளை அதிகளவில் அடைத்து ஏற்றிச் சென்ற மூடிய சரக்கு லொறி ஒன்று கவிழ்ந்து பாலமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் குறைந்தது 53 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 58 பேர் காயமடைந்தனர்.

தெற்கு மெக்சிகோவில் நெடுஞ்சாலை ஒன்றில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இந்தக் கோர விபத்து இடம்பெற்றது.

முதல்கட்டமாக சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி 49 குடியேற்றவாசிகள் உயிரிழந்தமை உறுதி செய்யப்பட்டது. பலத்த காயமடைந்த 40 பேர் உள்ளூர் மருத்துமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சியாபாஸ் மாநில சிவில் பாதுகாப்பு அலுவலகத்தின் தலைவர் லூயிஸ் மானுவல் மோரேனா தெரிவித்தார்.

விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நெடுஞ்சாலை நடைபாதை மற்றும் சரக்கு லொறி உள்ளே சிதறிக் கிடப்பதை சம்பவ இடத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்களில் காண முடிகிறது.

பாதிக்கப்பட்டவர்கள் மத்திய அமெரிக்காவில் இருந்து புலம்பெயர்ந்த குடியேற்றவாசிகள் எனத் தோன்றுவதாக மெக்சிக்கோ அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும் இவர்கள் அனைவரும் எந்தெந்த நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்ற விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை. விபத்தில் சிக்கி தப்பிப்பிழைத்தவர்களில் சிலர் தாங்கள் கௌதமாலா வைச் சேர்ந்தவர்கள் என்று கூறியதாக மோரேனோ தெரிவித்தார்.

அளவுக்கு அதிகமானவர்களை ஏற்றிச் சென்றதே இந்த விபத்துக்குக் காரணமாக இருக்கலாம். அதிகளவு எடையால் சரக்கு லொறி கவிழ்ந்து வீதி அருகே இருந்த இரும்புப் பாலத்துடன் மோதியிருக்கலாம் எனவும் சியாபாஸ் மாநில சிவில் பாதுகாப்பு அலுவலகத்தின் தலைவர் லூயிஸ் மானுவல் மோரேனா கூறினார்.

விபத்துக்குள்ளான லொறியில் குறைந்தது 107 குடியேற்றவாசிகள் இருந்திருக்கலாம் என நம்பப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஆஷஷ் டெஸ்ட் தொடர்: இங்கிலாந்து நிதானம்!

பிரிஸ்பேன், டிசெ. 11

டேவிட் மலன், ஜோ ரூட் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இரண்டாவது இனிங்ஸில் இங்கிலாந்து அணி நிதானம் காட்டி வருகின்றது. அந்த அணி 2 விக்கெட்களை மட்டும் இழந்து 220 ஓட்டங்களை சேர்த்துள்ளது.

ஆனால், அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸிற்காக 425 ஓட்டங்களை குவித்துள்ளது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை மோதும் ஆஷஷ் தொடரின் முதல் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று பிரிஸ்பேனில் தொடர்ந்தது.

இரண்டாம் நாள் ஆட்டம் முடிவில் 343 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்திருந்தது. ட்ராவிஸ் ஹெட் 112 ஓட்டங்களுடனும் மிற்செல் ஸ்ரார்க் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று தொடர்ந்த ஆட்டத்தில், அவர்கள் தொடர்ந்து துடுப்பெடுத்தாடினர்.

ஸ்ரார்க் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அடுத்து வந்த நதன் லியொன் 15 ஓட்டங்களை எடுத்து பெவிலியன் திரும்பினார். இதனிடையே 150 ஓட்டங்களை கடந்த ட்ராவிஸ் ஹெட் 14 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்களுடன் 152 ஓட்டங்களைப் பெற்று இறுதி விக்கெட்டாக வீழ்ந்தார்.

அவுஸ்திரேலிய அணி 104.3 ஓவர்களில் சகல விக்கெட்களையும் இழந்து 425 ஓட்டங்களைப் பெற்றது.




இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஒல்லி ரொபின்சன், மார்க் வூட் தலா 3 விக்கெட்களையும், கிறிஸ் வோக்ஸ் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து 278 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில், இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்தது.

ஹசீப் ஹமீத், ரொறி பேர்ன்ஸ் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். நிதானமாக இருவரும் துடுப்பெடுத்தாடியபோதும் பேர்ன்ஸ் 13 ஓட்டங்களுடனும், ஹமீத் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இங்கிலாந்து தடுமாறியது.

ஆனால், மூன்றாவது விக்கெட்டுக்காக டேவிட் மலன், ஜோ ரூட் ஆகியோர் அபாரமான ஆட்டத்தை தொடங்கினர். இருவரும் ஆஸியின் பந்துவீச்சாளர்களை நிதானமாக எதிர்கொண்டனர். இருவரும் அரைச்சதங்களை கடந்து தொடர்ந்து ஆடினர்.

டேவிட் மலன் 10 பௌண்ட்ரிகளுடன் 80 ஓட்டங்களையும், ஜோ ரூட் 10 பௌண்ட்ரிகளுடன் 86 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்த நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

70 ஓவர்கள் நிறைவில் இங்கிலாந்து அணி 2 விக்கெட்கள் இழப்புக்கு 220 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் மிற்செல் ஸ்ரார்க், பட் கம்மின்ஸ் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டமாகும். (ஐ)



## ஆஸி. ஓப்பனிலிருந்து விலகினார் பியான்கா

அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரிலிருந்து முன்னாள் அமெரிக்க ஓப்பன் சம்பியனமான, உலக தரவரிசையில் 46ஆவது இடத்தில் இருப்பவருமான 21 வயது கனடா வீராங்கனை பியான்கா அண்ட்ரிஸ்கு விலகி இருக்கிறார்.

ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடர் மெல்பர்னில் ஜனவரி 17ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரைநடக்கிறது.

'கொரோனா பாதிப்பு காரணமாக பல வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்டதால் உடல் ரீதியாகவும், மனதளவிலும் அதிகமாக பாதிக்கப்பட்டேன். இதனால் என்னால் போதிய அளவு பயிற்சியில் ஈடுபட முடியவில்லை. அடுத்த தொடருக்கு தயாராக எனக்கு கூடுதல் நேரம் தேவைப்படுவதால் இந்த விலகல் முடிவை எடுத்து இருக்கிறேன்' என்று பியான்கா தனது ருவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)




## சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டம் வெளியேறியது பார்ஸிரோனா!

பார்ஸிலோனா, டிசெ. 11

சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் தொடர்ந்து 17 ஆண்டுகளாக 'நொக் - அவுட்' சுற்றுக்கு முன்னேறி வந்த பார்ஸிலோனா அணி, இந்த சீசனில் அந்த வாய்ப்பை இழந்து போட்டியிலிருந்து வியாழக்கிழமை வெளியேறியது.

கடைசி ஆட்டத்தில் அந்த அணி 0-3 என்ற கணக்கில் பேயர்ன் முனீச் அணியிடம் தோற்றது. குறூப் 'இ'-யில் இடம் பிடித்திருந்த பார்ஸிலோனா மொத்தம் 6 ஆட்டங்களில் 2 வெற்றிகளே பெற்று 7 புள்ளிகளுடன் 3-ஆம் இடம் பிடித்தது. பேயர்ன் முனீச் அணியோ 6 ஆட்டங்களிலும் வென்று 18 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தது.

நட்சத்திர வீரர் மெஸ்ஸி வெளியேறியதை அடுத்து பார்ஸிலோனா இறங்குமுகத்தை சந்தித்து வந்த நிலையில், அதன் பயிற்சியாளர் ரொனால்ட் கோமென் நீக்கப்பட்டு, புதிய பயிற்சியாளராக ஜாவி ஹெர்னாண்டஸ் இணைந்தார். எனினும், அந்த அணி பெரிதாக முன்னேற்றத்தை சந்திக்கவில்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. (ஐ)

## "தலைமையிலிருந்து விலகுவதற்கு கோலிக்கு அவகாசம் வழங்கினோம்!"

புதுடில்லி, டிசெ. 11

ஒருநாள் மற்றும் இருபது - 20 கிரிக்கெட்டில் இந்திய அணியை ரோஹித் சர்மாவே வழிநடத்த வேண்டும் என்ற முடிவை தெரிவுக் குழுவும் தானுமே எடுத்தனர் என்று இந்திய கிரிக்கெட் சபையின் தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

இந்திய ஒருநாள் அணிக்கு புதிய தலைவராக ரோஹித் சர்மா கடந்த புதன்கிழமை நியமிக்கப்பட்டார். இதற்கு முன்னதாக ஒருநாள் அணித் தலைவர் பொறுப்பிலிருந்து விலகுவதற்கு விராட் கோலிக்கு 48 மணி நேர அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால், அவர் விலக மறுத்துவிட்டார் என்றும் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், இருபது - 20 அணியின் தலைவரான ரோஹித் சர்மாவே ஒருநாள் அணிக்கும் தலைவராக நியமிக்கப்பட்டமை குறித்து கங்குலி கூறுகையில்,

"இந்த முடிவை இந்திய கிரிக்கெட் சபையும், தெரிவுக் குழுவும் சேர்ந்துதான் எடுத்தது. இருபது - 20 கிரிக்கெட் தலைமை பொறுப்பிலிருந்து விலக வேண்டாம் என கோலியிடம் கோரியிருந்தோம். ஆனால், அவர் ஒப்புக்கொள்ளவில்லை. இதன்பிறகே, ஒருநாள் மற்றும் இருபது - 20 கிரிக்கெட்டுக்கு இரண்டு வெவ்வேறு தலைவர்கள் இருப்பது சரியாக இருக்காது என்று தெரிவு குழுவினர் எண்ணினர். எனவே, டெஸ்ட் அணித் தலைவராக விராட் கோலியும், ஒருநாள் மற்றும் இருபது - 20 தலைவராக ரோஹித் சர்மாவும் செயல்படட்டும் என முடிவெடுக்கப்பட்டது.

இந்திய கிரிக்கெட் சபையின் தலைவராக விராட் கோலியிடம் நான் தனிப்பட்ட முறையில் பேசினேன். தெரிவுக் குழுத் தலைவர்களும் அவரிடம் பேசினார்கள். ரோஹித் சர்மாவின் தலைமைப் பண்பு மீது எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. விராட் கோலி டெஸ்ட் தலைவராக தொடருவார். இந்திய கிரிக்கெட் சரியான கரங்களில் இருப்பதை இந்திய கிரிக்கெட் சபை உறுதியாக நம்புகிறது. ஒருநாள் மற்றும் இருபது 20 கிரிக்கெட்டில் தலைவராக விராட் கோலியின் பங்களிப்புக்கு நன்றி" என்றார் அவர்.

## நடுவரிசை துடுப்பாட்டத்தை பலப்படுத்த விரும்புகின்றேன்

புதுடில்லி, டிசெ. 11

இந்திய இருபது - 20 , ஒருநாள் அணிகளின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ரோஹித் சர்மா துடுப்பாட்ட நடுவரிசையை பலப்படுத்த விரும்புவதாகக் கூறியுள்ளார். 10 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழக்கும் சூழ்நிலையில் எப்படி விளையாட வேண்டும் என்று தயார்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன் என்று கூறினார்.

அணியின் ஆரம்பம் தடுமாறும்போது 3,4,5,6 ஆகிய இடங்களில் துடுப்பெடுத்தாடும் வீரர்கள் அந்த சூழ்நிலைக்கு ஏற்ப விளையாட வேண்டும். அடுத்து நடைபெறவிருக்கும் 20 ஓவர் உலகக் கிண்ணத் தொடருக்கு முன்பு சில ஆட்டங்கள் உள்ளன. அதை சோதித்துப் பார்க்க வேண்டும். 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் விழுந்த பிறகு வீரர் ஒருவர் என்ன ஷொட் விளையாடுகிறார் என்று மக்கள் நினைப்பதை நான் விரும்பவில்லை.

வர்ணணையாளர்கள், இந்திய மக்கள், இது அணியின் திட்டம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு தலைவர் விளையாடும்போது முன்னணியில் நிற்க வேண்டும். மற்ற எல்லாவற்றுக்கும் பின்னால் இருக்க வேண்டும். தலைவர் பின்னால் நிற்பதன் மூலம் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஏனென்றால், அவர் அனைவரையும் சுற்றி இருப்பதை உறுதி செய்ய முடியும்.




ஒரு துடுப்பாட்ட வீரராக கோலியின் திறமை அணிக்கு மிக முக்கியம். அவர் இன்னும் அணியின் தலைவர்தான். எனவே அவர் அணியில் இருப்பது மிகவும் முக்கிய மானது - என்றார். (ஐ)

# விறகு தேடிச் சென்ற மூதாட்டி மாயம்!

## அவர் அணிந்திருந்த உடையும் கத்தியும் மீட்பு; தேடுதல் வேட்டை தீவிரம்


நுவரெலியா, டிசெ. 11

நுவரெலியா மாவட்டம், வலப்பனை - கும்புக்வெல பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

கும்புக்வெல - மெதிலந்த பகுதியில் வசித்த 72 வயதான பீ.எம். டிங்கிரி மெனிக்கா என்ற மூதாட்டியே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

அவர் கடந்த 6ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றுள்ளார். அவர் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அவரின் புதல்வர்களும் பிரதேச மக்களும் தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் அருகில் உள்ள தெரிபே பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரும் இணைந்து தேடுதலை முன்னெடுத்த போதிலும் மூதாட்டியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.







எனினும், கடந்த 8 ஆம் திகதி முன்னெடுத்த தேடுதலில் குறித்த மூதாட்டி விறகு வெட்டுவதற்காக எடுத்துச் சென்ற கத்தியைக் கண்டுபிடித்தனர்.

அதனைத் தொடர்ந்து பின்னர், அருகில் உள்ள காட்டில் தேடியபோது, உடைந்த மரக் குற்றியில் குறித்த மூதாட்டி அணிந்திருந்த உடையும், விறகு தூக்கும்போது தலையில் வைத்துக் கொள்ள எடுத்துச் சென்ற சேலையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. எனினும், மூதாட்டியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

இதனால் மோப்ப நாய்களைப் பயன்படுத்தி மூதாட்டியைக் கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும், நேற்றுவரை காணாமல்போன டிங்கிரி மெனிக்கா தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ)



# யாழ்ப்பாணம் எம்.ஜி.ஆரின் ஆத்மா சாந்தி பிரார்த்தனையில் சர்வமதத் தலைவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 11

தமிழகத்தின் முன்னாள் முதல்வரும் நடிகருமான எம்.ஜி. இராமசந்திரனின் தீவிர இரசிகனும் நண்பருமான யாழ். எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஆத்மா சாந்தி பிரார்த்தனை நிகழ்வு நேற்று கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். சர்வமத தலைவர்கள் கலந்துகொண்டு கோப்பாய் சுந்தரலிங்கத்தின் ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்தனை நடத்தினர்.

இதில் குடும்ப உறுப்பினர்கள், அயலவர்கள் மற்றும் அவரது நண்பர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

யாழ். கல்வியங்காடு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். சிலை, யாழ் எம்.ஜி.ஆர். கோப்பாய் சுந்தரலிங்கத்தின் சொந்த நிதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் ஆண்டுதோறும் எம்.ஜி.ஆர். நினைவு தினங்களை அனுஷ்டித்து வந்ததுடன் அத்தினங்களில் வறிய மக்களுக்குத் தன்னாலான உதவிகளையும் யாழ். எம்.ஜி.ஆர். செய்து வந்துள்ளார்.

யாழ். எம்.ஜி.ஆர். என அழைக்கப்படும் கோப்பாய் சுந்தரலிங்கம் கடந்த மாதம் 11ஆம் திகதி நோய்வாய்பட்ட நிலையில் இயற்கை எய்தியமை குறிப்பிடத்தக்கது. (இ)




# அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள்

## மருத்துவர் சுகுணன் தகவல்

அம்பாறை, டிசெ. 11

"அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். அதன்படி கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்."

- இவ்வாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஜி. சுகுணன் குறிப்பிட்டார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நேற்று மாலை நடத்திய விசேட செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஐக்கிய நாடுகள் சபையால் டிசம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. 1981ஆம் ஆண்டு முதலாவது எயிட்ஸ்



நோயாளி இனங்காணப்பட்டதைத் தொடர்ந்து இன்று வரை 36 மில்லியன் மக்கள் இந்த எயிட்ஸ் நோயால் இறந்துள்ளனர். 37 மில்லியன் மக்கள் இன்று வரை எயிட்ஸ் நோயுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இலங்கையைப் பொறுத்தமட்டில் 2 ஆயிரத்து 600 பேர் சிகிச்சையை எயிட்ஸ் நோய்க்காகப் பெற்றுக்கொண்டிருக்கின்றார்கள். இன்றும் இலங்கையில் ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் எம்மிடையே மறைந்து வாழ்கின்றனர்.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் 51 எயிட்ஸ் நோயாளர்கள் காணப்படுகின்றனர். கல்முனை பிராந்தியத்தில் 4 எயிட்ஸ் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

எயிட்ஸ் நோயானது ஒருவரின் நிர்ப்பீடணசக்தியை இல்லாதொழிக்கின்றது. இந்த நோயானது 3 முறைகளில் பிரதானமாகப் பரவல் அடைகின்றது. அதாவது பாதுகாப்பற்ற பாலியல் செயல்பாடு, பாதுகாப்பற்ற ஊசிகள் மற்றும் இரத்தமாதிரிகளின் ஊடாகவும் பரவுகின்றன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் பாதுகாப்பற்ற முறையில் ஆண் - ஆணுடன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபடுவதால் 40 வீதத்துக்கு அதிகமாக எயிட்ஸ் அதிகரித்துச் செல்கின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்" - என்றார். (இ)





# மறுக்கப்பட்ட கருத்து சுதந்திரம் தொடர்பான செயலமர்வு யாழில்

யாழ்ப்பாணம், டிசெ. 11

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் கோவிட் - 19 காலத்தில் பெண்களின் மறுக்கப்பட்ட கருத்துத் சுதந்திரம் தொடர்பான செயலமர்வு நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

விழுது நிறுவனத்தின் சிரேஷ்ட சமூக வலுவூட்டாளர் வேந்தகுமார் ஜீவசர்மிளா தலைமையில் யாழ். திருநெல்வேலி லட்சுமி மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் அதிதிகளாக சட்டமாணி கதிர்தர்சினி பரமேஸ்வரன், யாழ். மாவட்ட பெண்கள் அபிவிருத்தி செயலக உத்தியோகத்தர் உதயனி நவரட்ணம் ஆகியோர் கலந்துகொண்டு கோவிட் காலத்தில் பெண்களின் மறுக்கப்பட்ட கருத்துச் சுதந்திரம் தொடர்பில் கருத்துப் பகிர்வுகளை மேற்கொண்டனர்.

இந்த நிகழ்வில் பெண்கள் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ - 03)

ஈழநாடு
Eelanadu

## 6 நாடுகளில் இருந்து இங்கு வருகை தரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

கொழும்பு, டிசெ. 11

தென் ஆபிரிக்கா உள்ளிட்ட 6 நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகை தரும் பயணிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை உடன் அமுலாகும் வகையில் நீக்கப்பட்டுள்ளது. சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலை வர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, தென்னாபிரிக்கா, நமீபியா, பொட்ஸ்வானா, லெசோதோ, சுவாஸிலாந்து மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகளைச் சேர்ந்த பயணிகளுக்கு இலங்கை வர விதிக்கப்பட்டிருந்த தடை இவ்வாறு நீக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 26ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஒமைக்ரோன் திரிபு தொற்றாளி இனங்காணப்பட்டார். இதையடுத்து கடந்த 27ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் மேற்படி 6 ஆபிரிக்க நாடுகளில் இருந்து இலங்கை வரும் பயணிகளுக்குப் பயணத் தடை விதிக்கப்பட்டிருந்தது. (இ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 15 - 05 - 1926

மறைவு 09 - 12 - 2021

### சிவசிதம்பரம் சதாசிவம்

Retired Tea Factory Officer- Telpatha Badulla

அராலியைப் பிறப்பிடமாகவும், பதுளை, உரும்பிராய் வடக்கு, கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசிதம்பரம் சதாசிவம நேற்றுமுன்தினம் (09.12.2021) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற திரு. திருமதி சதாசிவம் தம்பதியரின் அன்பு மகனும், திரு. திருமதி சின்னத்துரை தம்பதியரின் அன்பு மருமகனும், இந்திரலீலா அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற மோகனகுமார், மனோ (Optimart- Canada), மகிழ்ராஜன்(கனடா), ஜெயராஜன்(கனடா), ஜீவா(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,காலஞ்சென்ற குணரஞ்சன், லக்சி(கனடா), Editha(கனடா), சாந்தகுமாரன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,கௌதமி, சங்கீதா, கோபி, பிரவீனா, ஜெயந்தன், வணசா, ஓலிவர் ஆகியோரின் அன்புப் பேரனும், Elora அவர்களின் அன்புப் பூட்டனும்,காலஞ்சென்ற வைரவநாதன், சிவபாக்கியம், குணரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற இந்திரதேவன், பரமதேவன்(கனடா), கிருஷ்ணதேவன்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

கிரியை :
Monday, 13 Dec 2021 2:30 PM
Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada.

தொடர்புகளுக்கு :
**ஜெய் - மகன்**
**Mobile : +15145866452**

தகவல்:
**குடும்பத்தினர்**

# அவசர சிகிச்சைப் பிரிவில் இலங்கை; பொதுஜன பெரமுன அரசே காரணம்

## பிரதான எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

**கொழும்பு, டிசெம்பர் 11**

**“இந்த நாட்டை ‘வன் மேன் ஷோ’வினால் மீட்டெடுக்கமுடியாது. அவசர சிகிச்சைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்ட நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. இதற்கு ராஜபக்ஷவினரின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசே காரணமாகும்.”**

**- இவ்வாறு எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன சபையில் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அரசை கையில் எடுத்ததில் இருந்து நாட்டின் சகல துறைகளும் வீழ்ச்சி கண்டுள்ளன. பொருளாதாரம் சரிந்துவிட்டது. மக்களை வரிசையில் நிற்கவைத்து விட்டீர்கள். நாடே நிதி நெருக்கடிக்குள் வீழ்ச்சி கண்டு விட்டது. வரவு - செலவுத் திட்டத்தைக் கூட கடன்களில் கையாள வேண்டிய நிலைமையே ஏற்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான் நாடு கடன்களில் சிக்க ஆரம்பித்தது. அப்போதைய நிதி அமைச்சர் இன்று பிரதமர், அப்போதைய மத்திய வங்கி ஆளுநரே இன்றும் ஆளுநராக உள்ளார். இவர்களால் மீண்டும் அதே பயணத்தை மட்டுமே முன்னெடுக்க முடியும்.

உலகில் உள்ள நாடுகளில் தமது வெளிநாட்டு கையிருப்பை ஒரு பில்லியனுக்கும் குறைவாகக் கொண்டுள்ள நாடொன்று இருக் கும் என்றால் அது இலங்கை எனப் பதிவு செய்துகொள்ள வேண்டும். அந்தளவு மோசமான நிலைக்கு நாடு சென்றுள்ளது. இந்தநிலையில் எந்த நாடும் எமக்குக் கடன் கொடுக்காது. அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரசில் இருக்கும் ஒரு சிலர் நாட்டின் நிலைமைகளை விமர்சித்துவிட்டு இப்போது வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்க முடியுமா? இந்த வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்தால் நாடு விரைவாக நாசமடையும். அவ்வாறான திட்டங்களே இந்த வரவு - செலவுத் திட்டத்தில் உள்ளது.

குறுகிய காலத் திட்டங்களைச் சமர்ப்பித்து நாட்டின் நிதி நெருக்கடியைக் கையாள முடியாது. நாடு இதனைத் தாண்டிய பெரும் பொறிக்குள் சிக்கிக்கொண்டுள் ளது. எமது பிணைகளைக் கூடப் பெற்றுக் கொள்ள எவ ரும் தயாரில்லை. அப்படியே பெற்றுக்கொள்ள வந்தாலும் அவர்கள் கறுப்புப் பண வியாபாரிகளே மட்டுமே வருவார்கள்.

அவ்வாறான கறுப்புப் பணக் கோஷ்டியொன்று 2022 ஆம் ஆண்டில் நாட்டை ஆக்கிரமிக்கப் போகின்றது என்ற தகவலும் எமக்குக் கிடைத்துள்ளது.

இந்த நாட்டை ‘வன் மேன் ஷோ’வினால் மீட்டெடுக்க முடியாது. அந்த மனநிலையில் இருந்து விடுபட முடியும். நாடு அவசரப் சிகிச்சை பிரிவில் ஒப்படைக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவே, நாட்டை உடனடியாக மாற்றியமைக்க வேண்டும்” - என்றார். (இ)

## இரண்டு வாரங்களுக்குள் பூஸ்டரை நிறைவு செய்க!

### ஜனாதிபதி பணிப்புரை

கொழும்பு, டிசெ. 11

இரண்டு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசியை நிறைவு செய்யுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

வரவிருக்கும் பண்டிகைக் காலத்தில் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த பூஸ்டர் தடுப்பூசி போடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 12-15 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கும் தடுப்பூசி

கொழும்பு, டிசெ. 11

நாட்டிலுள்ள 16 தொடக்கம் 19 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசி வழங்கவும் 12 முதல் 15 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களுக்கு முதலாம் கட்டத் தடுப்பூசியை வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

அதற்கான அனுமதி சுகாதார பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.வழங்கியுள்ளார்.

## திருமண நிகழ்வில் பங்கேற்ற 15 பேருக்கு கொரோனா உறுதி

கொழும்பு, டிசெ. 11

மாத்தறையில் நடைபெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்து கொண்ட நிக்கவெரட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 15 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

திருமண வைபவத்துக்காக 20 பேர் கொண்ட குழுவொன்று நிக்கவெரட்டியவில் இருந்து மாத்தறைக்குச் சென்றதாகவும் அவர்களில் 15 பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் கூறினர்.

பாதிக்கப்பட்ட 15 பேரின் 10 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவர்களுடன் தொடர்பு பேணியவர்களுக்கு அன்ரிஜென் பரிசோதனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.12.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி - யோன்சன் ராஜ்குமார்
ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்



07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - மறு ஒளிபரப்பு
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE - இயற்கை
04.30 மணி : காட்டுன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
07.00 மணி : கொழும்பு - 16 - உங்களுக்கு தெரியாத கொழும்பு
07.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்




09.00 மணி: சொல்லாடுகளம்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு